நூலகத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 24 திங்கட்கிழமை (10.12.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356




## எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில்

# ஏழு நாடுகளின் மதத் தலைவர்கள்

# யாழ்ப்பாண நூலகத்தில் கூடி மாநாடு

## அகாஷியும் பங்கேற்கின்றார்

(கொழும்பு)

**இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஏழு நாடுகளைச் சேர்ந்த மூத்த சமயத் தலைவர்கள் எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் மாநாட்டை நடத்தவுள்ளனர். இந்த மாநாட்டில் இலங்கைக்கான யப்பானின் சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி கலந்து கொண்டு விசேட உரையாற்றவுள்ளார்.** (10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மருத்துவர்கள் நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் சேவையாற்ற இம்முறை கணிசமான அளவு சிங்கள மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள தமிழ் மருத்துவர்களில் பலரும் இம்மாவட்டத்தில் சேவையாற்ற முன்வராமையே இதற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 38 மருத்துவர்களில் 32 பேர் சிங்களவர்கள் எனக் கூறும் சுகாதார அமைச்சு அதிகாரிகள் போதனா வைத்தியசாலைக்கும் அண்மையில் அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்ட பிரதேச வைத்தியசாலைகளுக்கும் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. சா/த பரீட்சை நாடு முழுவதிலும் இன்று ஆரம்பம்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை பத்து நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். இம்முறை 3 இலட்சத்து 93 ஆயிரத்து 873 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 54 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 5 இலட்சத்து 29 ஆயிரத்து 121 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளார்கள் என பிரதி பரீட்சை ஆணையாளர் டபிள்யு.எம்.எம்.ஜே. புஷ்பகுமார தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைக்காக 3 ஆயிரத்து 988 பரீட்சை மத்திய நிலை (02 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்படும்

## முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்க ளிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. கிழக்கே முஸ்லிம்களின் நிலங்களைப் பறித்துப் பெரும்பான்மை மக்களுக்கு வீடுகளைக் கட்டவும் காடுகளை வளர்க்கவும் அரசு எடுத்து வரும் முடிபைக் கைவிடா விட்டால் அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ள நேரிடும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட அக் கட்சியின் செயலாளர் ஹசன் அலி, தமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளையும் மீறி இவ்வாறான செயல்களில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி முன்னரங்கில் மோதல்

(கொழும்பு)

கிளாலி முன்னரங்கில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இம்மோதலில் விடுதலைப் புலிகளின் பதுங்கு குழியொன்றை இராணுவத்தினர் தாக்கியழித்ததாகவும் இத்தாக்குதலில் 4 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும் தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்போது இராணுவத்திற்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (எ-5)

## வெளிவிவகார அமைச்சின் செயலாளராக காரியவாசம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் செயலாளராக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான பிரசாத் காரியவாசம் நியமிக்கப்படக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகன்ன வாஷிங்டனுக்கான இலங்கைத் தூதுவராகப் பொறுப்பேற்கவுள்ளதாகவும் தெரிகின்றது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவரான பேர்னாட் குணதிலக்கவின் பணிக்காலம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நந்தன குணதிலக தலைமையில் ஜே.வி.பி. அதிருப்திக் குழு உதயம்?

(கொழும்பு)

ஜே.வி.பியின் அதிருப்தியாளர்கள் இணைந்து நந்தன குணதிலக தலைமையில் புதிய குழுவை மகிந்த ராஜபக்ஷ உருவாக்கவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மகிந்த அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் மீதான 3 ஆம் வாக்கெடுப்பின்போது ஜே.வி.பி. எதிர்த்து வாக்களிக்கவுள்ளது. இந் நிலையில் ஜே.வி.பியிலிருந்து நீக்கப்பட்ட ஆனால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து நீடித்து வரும் நந்தன குணதிலகவை (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை குறித்த நிலைப்பாட்டை பிரித்தானியா இன்று வெளியிடும்!

(கொழும்பு)

இலங்கை குறித்த பிரித்தானியா மற்றும் மேற்குலக நாடுகளின் நிலைப்பாடு இன்று அறிவிக்கப்படக் கூடும் என்று மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இன்று நடைபெறவுள்ள டட்லி சேனநாயக்காவின் 10-வது ஆண்டு நினைவு நிகழ்வில் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் சில்கொட், 'புதிய நூற்றாண்டில் புதிய இராஜதந்திரம்' என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

அவர் தனது உரையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் விமானங்களை அழிக்க செக் குடியரசுப் படை இலங்கை வருகின்றது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான் படைப் பலத்தை முழுமையாக அழித்து விடுவதற்காக யுத்த தொழில்நுட்ப உதவிகள் மற்றும் பயிற்சி வழங்க செக் குடியரசு தமது படையினரை அனுப்ப முன்வந்துள்ளதாக லக்பிம சிங்கள வார ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் லக்பிம வார ஏட்டில்

### லக்பிமவில் செய்தி

வெளியாகியுள்ள செய்தி வருமாறு,

தமிழீழ விடுதலைப்புலிகளின் விமானங்களை அழிப்பதற்கு விமான அழிப்பு ஏவுகணை மற்றும் அவற்றைச் செயற்படுத்துவது தொடர்பாக இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிக்கவும் தயாராக இருப்பதாக இலங்கைக்கு செக் குடியரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் தற்போது பயன்படுத்தும் சிலின் - 143 (10 ஆம் பக்கம் பார்க்க)

## வீடியோக் கடை உரிமையாளர் ஏழாலையில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

ஏழாலை குப்பிளான் வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.10 மணியளவில் வீடியோக் கடை உரிமையாளர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் ஏழாலை மத்தியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பரமநாயகம் மயூரன் (வயது-27) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து ஏழாலை மத்திய மகா வித்தியாலயத்திற்கு (10 ஆம் பக்கம் பார்க்க)



பெண்களிற்கு எதிரான வன்முறை ஒழிப்பு- 16 நாள் முன்னெடுப்புகள் Nov 25 - Dec 10

இன்றிலிருந்தாவது பெண்களிற்கு எதிரான வன்முறைகளை செய்யாதிருக்கவும் அவர்களிற்கெதிரான சகல பாரபட்சமான நடைமுறைகளை இல்லாதொழிக்குமுகமாக நாம் செயற்படுவோம். மாற்றத்தை நிகழ்த்துபவர்கள் என்ற ரீதியில் நாம் ஆண்களிற்கும் பெண்களிற்கும் சமமான கௌரவத்தையும் வாய்ப்புகளையும் வழங்குவோம்.

பால் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு, யாழ்ப்பாணம் - 021 222 6922, 021 222 9671

(C-560)

# கார்மார்ட் நிறுவனம் வழங்கவிருந்த காரையே ஜனாதிபதி முரளிக்கு வழங்கினார்

## சொந்தப் பணத்தில் வாங்கவில்லையாம்

(கொழும்பு)

டெஸ்ட் வரலாற்றில் அதிகூடிய விக்கெட்டுக்களை வீழ்த்திய இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனுக்கு ஜனாதிபதி வழங்கிய கார் அவரின் சொந்தப்பணத்தில் வாங்கவில்லை என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிரிக்கெட்டில் உலக சாதனை புரிந்த முத்தையா முரளிதரனுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அன்பளிப்பாக வாகனத்தின் சாவியை வழங்கும் புகைப்படங்கள் அனைத்து ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது.

ஒரு நாட்டின் விளையாட்டு வீரருக்கு ஒரு அரசாங்கத்தின் உயர் பொறுப்பிலுள்ளவர் இத்தகைய அன்பளிப்புக்களை வழங்கும் போது பொதுவாக அரசாங்கம் வழங்கியதாக கருதப்படுகிறது.

அந்தவகையில் ஜனாதிபதி ஏதோ சொந்தப்பணத்திலோ அல்லது அரசாங்கத்தின் அமைச்சரவை கூடி தீர்மானித்தோ இதனை வழங்கிவிடவில்லை என்ற குட்டு அம்பலப்பட்டு நிற்கிறது.

கண்டி அஸ்கிரிய விளையாட்டரங்கில் 8.5 மில்லியன் ரூபா மதிப்புள்ள அந்த வாகனத்தை வழங்க "கார்மார்ட்" நிறுவனம் அனுப்பியிருந்தது.

அதை அறிந்த ஜனாதிபதி வாகனத்தை தனது அலரி மாளிகைக்குக் கொண்டு வரச் சொல்லி தானே வாகனத்தை வழங்கி புகழ் தேடிக்கொண்டார் என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தை நாடாளுமன்றிலும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எழுப்பிவிட, மகிந்த ஆதரவாளர்கள் கொந்தளித்துப் போய் சபைக்குறிப்பிலிருந்து அதனை நீக்க வேண்டும் என்று கூறினர்.

ஆனாலும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவோ தனது குற்றச்சாட்டில் உறுதியாகவே இருந்தார். இதுதொடர்பில் அந்த வாகனத்தை வழங்கிய கார்மார்ட் நிறுவனத்தின் முகாமை இயக்குநர் சேனக அமரசிங்கவை கொழும்பு ஊடகவியலாளர்கள் தொடர்பு கொண்டு கேட்ட போது, அவர் ஜோன்ஸ்டனின் கருத்தை மறுக்கவுமில்லை, தான் கருத்து எதனையும் தெரிவிக்கவும் இல்லை என்றும் கூறியதோடு மட்டுமல்லாது (வெள்ளிக்கிழமை) நடக்கப்போவதைப் பாருங்கள் என்றும் கூறியுள்ளார்.

அவர் கூறியபடியே வெள்ளிக்கிழமை மாலை கார்மார்ட் நிறுவனம் வழங்கவிருந்த வாக்னத்தை முரளிக்கு ஜனாதிபதி வழங்கிய நிகழ்வு அரங்கேறியது. (ச-5)

# தமிழக காங்கிரஸை தூண்டிவிடுவது இந்திய மத்திய உளவுத்துறையே

## அம்பலப்படுத்தியது ஜூனியர் விகடன்

(சென்னை)

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக தாய்த் தமிழக உறவுகள் கிளர்ந்தெழுவதை சகிக்க முடியாத இந்திய மத்திய உளவுத்துறை, தமிழக காங்கிரஸ் கட்சியினரை தூண்டி வருவதாக தமிழ் நாட்டில் இருந்து வாரம் இரு முறை வெளியாகும் பிரபல ஏடான ஜூனியர் விகடன் அம்பலப்படுத்தியிருக்கின்றது.

ஜூனியர் விகடனில்12.12.2007 அன்று வெளிவந்த பதிப்பின் செய்தி விபரம் வருமாறு, சிலநாட்களுக்கு முன்பு சென்னையில் ஊடக மாநாடு நடத்திய காங்கிரஸின் முன்னாள் எம்.எல்.ஏ. ஆன எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன், சமீபத்தில் கொல்லப்பட்ட சு.ப.தமிழ்ச்செல்வன் மறைவுக்கு பின்னால் அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் கரங்களே இருக்கிறது என்று ஒரு குண்டைப்போட்டார்.

இலங்கையிலிருந்து வந்த அவருடைய நண்பர்கள் சிலர் இயக்கத்தில் தமிழ்ச்செல்வனின் அதீத வளர்ச்சி பிரபாகரனுக்குப் பிடிக்கவில்லை. அதன் பின்னணியில் தான் தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டிருக்கிறார்... என்றார்களாம்.

மத்திய உளவுத்துறையில் இருக்கும் நண்பர்களிடமும் இதுபற்றி பேசினாராம் அப்புறம்தான் இந்தக் குண்டை எஸ்.ஆர்.பி. வீசியதாக அவர் வட்டாரம் சொல்கிறது.

கூடவே எஸ்.ஆர்.பி., தமிழக அரசையும் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்திருக்கிறார். என்று ஜூனியர் விகடன் வாரம் இருமுறை இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-5)

# லண்டனிலிருந்து வந்தவர் உட்பட மூவர் வானுடன் வியாழன் அன்று கடத்தல்

(கொழும்பு)

லண்டனில் இருந்து வந்தவரை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அழைத்துக் கொண்டு வவுனியா சென்ற வான், மூவருடன் கடந்த வியாழக்கிழமை இரவு காணாமல் போய் உள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா குருமண்காட்டைச் சேர்ந்த லோகநாதன் (வயது 55) என்பவர் லண்டனில் இருந்து கடந்த வியாழக்கிழமை இலங்கைக்குத் திரும்பினார்.

அவரை வவுனியா கற்குழியைச் சேர்ந்த சரணமுத்து சதீஸ்வரன் (வயது 34), கோவில்குளத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் சதானந்தன் (வயது 31) ஆகிய இருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அழைத்துச் செல்ல கொழும்பு சென்றிருந்தனர்.

மூவரும் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வவுனியாவுக்கு கடந்த 6 ஆம் திகதி புறப்பட்டனர். அநுராதபுரத்தை மூவரும் சென்றடைந்ததும் தாங்கள் அநுராதபுரத்திற்கு வந்து விட்டதாகவும் இன்னும் சுமார் ஒன்றரை அல்லது இரண்டு மணித்தியாலயங்களுக்குள் வீட்டுக்கு வந்து விடுவதாகவும் உறவினர்களுக்கு தெரிவித்துள்ளனர்.

ஆனால் சுமார் இரண்டு மணித்தியாலயங்களின் பின்னரும் அவர்கள் வீடு வந்து சேரவில்லை. அவர்களிடமிருந்து தொலைபேசித் தகவல் எதுவும் வரவில்லை.

இதனால் மூவரது கைத்தொலைபேசியில் தொடர்பு கொள்ள உறவினர்கள் முயற்சித்துள்ளனர் எனினும் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை.

அநுராதபுரத்திற்கும் வவுனியாவிற்கும் இடையே அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து எந்தத் தகவலும் இதுவரையில் தெரியவரவில்லை என்று கடத்தப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.விநோதராதலிங்கம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைக்குழு ஆகியவற்றிடமும் கடத்தப்பட்டோரின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (ச-5)

# கதிரவெளியில் 122 தமிழர்கள் கைது

பொலநறுவப் பிரதேசம் கதிரவெளியில் இராணுவத்தினரால் 122 தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கதிரவெளியில் நேற்று முற்பகல் 9.00 மணியளவில் 300க்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இந்நடவடிக்கையின்போது பல வீடுகள் மற்றும் வாகனங்கள் சோதனையிடப்பட்டன. விசாரணைக்காக 122 தமிழர்களை கைது செய்து பொலநறுவப் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். (ச-5)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் தரம் 1, தரம் 2 ஆகியவற்றின் வகுப்பாசிரியர்களுக்கான செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கில பாட செயலமர்வுகள் நடாத்தப்படவுள்ளன.

தரம் 1 வகுப்பாசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 13 ஆம் திகதியும் தரம்2 வகுப்பாசிரியர்களுக்கான செயலமர்வு 14 ஆம் திகதியும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

(அ-7)

# இலங்கையின் ஒத்துழைப்புக்கு பாகிஸ்தான் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஒத்துழைப்பு செயற்பாடுகள் இரு நாடுகளுக்கிடையில் நெருங்கிய தொடர்புகளை முன்னெடுக்க பெரும் உதவியாக அமைந்துள்ளதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இனாம் முகாப் தெரிவித்திருக்கின்றார்.

பொதுநலவாய நாடுகளின் அமைப்பிலிருந்து தமது உறுப்புரிமையை இடைநிறுத்தும் தீர்மானத்தின்போது இலங்கை அதற்கெதிராக குரல் கொடுத்தமை தொடர்பாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற சார்க் அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டின்போது வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவிடம் இந்த விடயம் தொடர்பாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் இரு நாடுகளுக்கிடையே பொருளாதார உறவுகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை இரு நாடுகளுக்குமிடையில் விமான சேவை விஸ்தரிப்பது தொடர்பாக அடுத்த மாதம் முற்பகுதியில் இலங்கை-பாகிஸ்தான் விமான சேவை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஜப்பான் தலைவர்களுடன் ஜனாதிபதி இன்று சந்திப்பு

(டோக்கியோ)

ஜப்பானுக்கான மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் தலைநகர் டோக்கியோவை சென்றடைந்தார்.

நேற்று முற்பகல் ஜப்பானில் அமைந்துள்ள கியோட்டா நகரில் அமைந்துள்ள கியோமுசி விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு விகாராதிபதி மோர்குடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

டோக்கியோவை சென்றடைந்த ஜனாதிபதி ஜப்பானிய தொழில் வாய்புக்களிலும் கல்வி நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட இலங்கையர்கள் ஏற்பாடு செய்திருந்த சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பான் மன்னர் அகிஹிதோ, பிரதமர் யசோ குகடா உள்ளிட்ட முக்கிய தலைவர்களை இன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



ஜப்பான் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கியோட்டா நகரில் அமைந்துள்ள கியோமுசி விகாரைக்கு அந்நாட்டு அதிகாரிகளினால் அழைத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம்.

# க.பொ.த. சா/த பரீட்சை...

யங்களும் 528 இணைப்பு நிலையங்களும் 38 விடைத்தாள் சேகரிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதோடு தங்கல்ல, இரத்மலான சிறைச்சாலைகளிலும் தமிழ் நாட்டில் அகதிகளாகத் தங்கியுள்ள மாணவர்களுக்காக சென்னையிலும் பரீட்சைகளை நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வழமையாக காலை நேரத்தில் முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமான க.பொ.த சா/த பரீட்சை இம்முறை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

க.பொ.த சா/த பரீட்சை 60 பாடங்களுக்கு நடத்தப்படுகின்றது. இம்முறை 2 புதிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

எனினும் பாடசாலை மூலம் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு தபால் திணைக்களத்தின் அடையாள அட்டை ஏற்றுக்கொள்ளப்படும்.

அதேநேரத்தில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.

பரீட்சை கடமையில் ஈடுபடுவோர் நம்பகத்தன்மையை பேண வேண்டும் எனவும் பரீட்சை ஒழுங்கீனங்களை தடுக்க பரீட்சார்த்திகளின் சட்டப்பைகளையும் சோதித்துப்பார்க்க சட்டரீதியாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் க.பொ.த சா/த பரீட்சையினை திட்டமிட்ட முறையில் நடாத்துவதற்கென சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வருடம் 22 ஆயிரம் மாணவர்கள் யாழ்.மாவட்டத்திலிருந்து தோற்றுகின்றனர். யாழ்.மாவட்டத்தில் பரீட்சைகளை நடத்துவதற்கு வசதியாக யாழ்.மாவட்டம் I, யாழ். மாவட்டம் II என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# போர்க்களத்தின் மத்தியிலும் ஓர் அமைதி இருக்கிறது!



"வெளியே நடக்கும் போர் எம் உள்ளே இருந்து தான் உற்பத்தியாகின்றது. அத்துடன் உள்ளே நடக்கும் போராட்டம் மிகவும் அபாயகரமானது. இது தான் அந்தப் போர்க்களம். எம்முள்ளே நாம் புரிந்துகொள்ளவே முடியாத அழிவை ஏற்படுத்தக் கூடியவை உள்ளன. எம்முள்ளே எழும் போர் நம்ப முடியாதவை. இருந்தும் போர்க்களத்தின் மத்தியிலும் ஓர் அமைதி இருக்கின்றது"

மக்கள் தம்முள்ளே அமைதியைக் கண்டு மகிழ்வதற்கு உதவி செய்கின்றார். அதற்காக தமது வாழ்வின் பெரும் பகுதியினை உலகெங்கும் பிரயாணம் செய்வதில் கழிக்கின்றனர். அவர் தனது மூன்று வயதிலேயே கேட்க வருவோருக்கு இச்செய்தி பற்றி உரையாற்றத் தொடங்கினார். தமது நான்கு வயதில் முதலாவது விளம்பரப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். உள்ளே அமைதியைத் தேடுவோர் அவரின் உரையினைக் கேட்டு மெய்சிலிர்த்தனர். உள்ளே அமைதியினைக் கண்டு கொள்வதே அவரது உரைகள் யாவற்றினதும் சாராம்சமாக அமைந்துள்ளது.

**மகராஜியின் ஐம்பதாவது பிறந்த தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. அவரது பிறந்த நாள் விழா இன்று காலை 10.30 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறுகின்றது.**

**மேலும் தகவல்கள் அறிய தொடர்புகொள்ள வேண்டிய குடாநாட்டுத் தொலைபேசி எண்: 2223075**

**இணையத்தளங்கள்: www.emmullayam.com (தமிழ்)**
**www.wordsofpeace.net (ஆங்கிலம்)**

"மக்கள் எந்தச் சந்தர்ப்ப சூழ்நிலையில் வாழ்ந்தாலும் ஒவ்வொருவரும் அமைதியில் இருக்க முடியும். அக அமைதியைக் காண்பதற்கானவழிஉள்ளேபார்ப்பதுதான். இந்தவாழ்வை வெற்றிகரமாக்குவது என்பது நாளை, இளைப்பாறிய பின், பத்து வருடங்களின் பின் செய்ய வேண்டிய விடயமல்ல. அது இப்பொழுதே இந்த வாழ்க்கையில்செய்யவேண்டியது. அகஅமைதி என்பது சொற்களின் சாராம் சம் அல்ல. அமைதி உணரப்படவேண்டியது. அமைதி அனுபவிக்கப்பட வேண்டியது"

மகராஜி என்னும் கௌரவப் பெயரால் அழைக்கப்படும் பிறேம் ராவட் அவர்களின் அமைதி பற்றிய செய்தியின் சில துளிகளே இவையாகும். அவர் இந்தச் செய்தியின்ன எடுத்துச் சென்று

தனது பதின்மூன்றாவது வயதில் அவர் எல்லாக் கண்டங்களுக்கும் தனது செய்தியினை எடுத்துச்செல்லத் தொடங்கினார். அன்று தொடக்கம் ஜப்பான் தொடக்கம் கென்யா வரை தென்னாபிரிக்கா தொடக்கம் பின்லாந்து வரை நேபாளம் தொடக்கம் சிம்பாப்வே வரை ஆர்ஜன்டீனா தொடக்கம் பிஜி வரை உள்ள மக்களுக்கு உரையாற்றியுள்ளார். இன்று அவரது செய்தி எண்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் அறுபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் கிடைக்கிறது. மனித வரலாற்றில் கலாசாரம், சமய நம்பிக்கைகள் மற்றும் அரசியல் நிலைப்பாடுகள் என்பன எண்ணற்ற முரண்பாடுகளை மக்களிடையேயும் நாடுகள் மத்தியிலும் தோற்றுவித்துள்ளன. ஒருபோதும் இல்லாதது போன்று இன்று உலகெங்கும் மோசமான பகைமையைக் காணக்கூடியதாக உள்ளது. அதற்கு ஒரு முடிவு அண்மையில் ஏற்படுவதாகத் தெரியவில்லை.

ஒரு குறிப்பிட்ட அரசியல், சமய மற்றும் சமுதாய அமைப்பு[…]ந்த அமைதியைக் கொண்டு வருவதற்கு பல மக்களும் இயக்கங்களும் முயன்று வருகின்றன. அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட கருத்துக்களை, கோட்பாடுகளை, நம்[…]கைகளை அல்லது ஒழுங்கு முறைகளை வளர்க்க முயல்கின்றார்கள். அவை சிலரை உள்ளடக்கி பலரை புறம் தள்ளி வைக்கின்றன.

இன மத கலாசார அரசியல் மற்றும் வேறுபட்ட நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு அமைதி உள்ளது. ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் உள்ள அந்த அமைதியைப் பற்றிய மகராஜியின் உரைகள் மக்கள் மத்தியில் மிகுந்த பாராட்டைப் பெற்று வருகின்றன.

"நீங்கள் தேடிக்கொண்டிருக்கும் அமைதி உங்களுக்குள்ளேயே உள்ளது. எவ்வாறு அதனுடன் தொடர்பை ஏற்படுத்துவதென்று என்னால் காட்டித்தர முடியும். அந்த அமைதியினை நீங்கள் உங்கள் வாழ்க்கையில் அனுபவித்தல் இன்றியமையாதது" இது அவரது அழகான ஆனால் எளிமையான செய்தியாகும்.

"இன்று மக்கள் உலக அமைதியினைப் பற்றிப் பேசுகின்றார்கள். உலகிலுள்ள மக்கள் அமைதியில் இருக்கும்போதே உலகில் அமைதி நிலவும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அமைதி உருவாக வேண்டும். அதுவே இன்றைய தேவை" என்று கூறும் மகராஜி அக அமைதிச் செயல்முறையில் அமைந்த வழிமுறையினை வழங்குகின்றார். அதை அவர் "ஞான வழி முறை" என அழைக்கின்றார்.

"அமைதி ஒவ்வொரு தனிமனிதனிலும் இருந்து தொடங்குகிறது. இது தனியே தாபனங்களின் விவகாரம் அல்ல. இது ஒவ்வொருவரின் உள்ளத்தாலும் உணரப்பட வேண்டிய ஒன்று. நாம் வாழ்வை மேம்படுத்த, எம்மை மேம்படுத்த நமது சொந்த வழியில் முயல்கிறோம். இருந்தும் நாம் திருப்தியடைவதில்லை. அமைதி அடைவதற்கு எது எம்மை உள்ளே இருந்து ஊக்குவிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள முயல்வதில்லை" எனக் கூறும் மகராஜி அமைதியை ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியமானதாக்குகின்றார்.

**—மகராஜி**

# பிரபாகரனை கொல்ல தூதர் தீட்சித் உத்தரவிட்டாரா? அமைதிப்படை தளபதி சொல்வதில் உண்மை இல்லை

## ஜி.பார்த்தசாரதி மறுப்பு

(புதுடில்லி)

விடுதலைப்புலி தலைவர் பிரபாகரனை கொல்ல தூதர் உத்தரவிட்டார் என்று அமைதிப்படை தளபதி கூறியதை, ராஜீவ்காந்தியின் செயலாளராக இருந்த ஜி. பார்த்தசாரதி மறுத்துள்ளார். அமைதிப்படை தளபதி சொல்வதில் உண்மை இல்லை என்று அவர் தெரிவித்தார்.

மறைந்த ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த போது, இலங்கையில் அமைதி ஏற்படுத்தும் பணியில் இந்திய இராணுவம் ஈடுபடுத்தப்பட்டது. அப்போது இந்திய அமைதிப்படை தள பதியாக மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங் இருந்தார். இவர் பணியில் இருந்து ஓய்வுபெற்றுவிட்டார். இந்நிலையில் ஹர்கிரத்சிங், "இன்டர் வென்ஷன் இன் ஸ்ரீலங்கா" என்ற பெயரில் ஒரு புத்தகம் எழுதியுள்ளார்.

அதில், கடந்த 1987ஆம் ஆண்டில் இந்திய அமைதிப்படைக்கு நான் தலைமை வகித்த போது, இலங்கைக்கான அப்போதைய இந்தியத் தூதர் ஜே.என்.தீட்சித் எனக்கு போன் செய்து, விடுதலைப்புலிதலைவர் பிரபாகரனை கொன்று விடுங்கள். இது பிரதமர் ராஜீவ்காந் தியின் உத்தரவு என்று தெரிவித்தார். ஆனால் நான் அந்த உத்தரவை நிறைவேற்ற மறுத்து விட்டேன் என்று ஹர்கிரத் சிங் கூறியிருந்தார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் அமைதிப்படை தளபதியின் இந்தக் குற்றச்சாட்டை, ராஜீவ்காந்தியின் செயலாளராக இருந்த ஜி.பார்த்தசாரதி மறுத்துள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது,

ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது, பிரதமர் அலுவலகத்தில் இலங்கை தொடர்பான விவகாரங்களை நான்தான் கவனித்துக் கொண்டிருந்தேன். அந்தக் காலகட்டத்தில் அமைதிப்படை கமாண்டர்களையும், அதிகாரிகளையும் சந்திப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு பல முறை சென்றிருக்கிறேன். அப்போது திறமையின்மை காரணமாக அமைதிப்படை தளபதி பொறுப்பில் இருந்து ஹர்கிரத் சிங் நீக்கப்பட்டுள்ளார் என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். இராணுவ கமாண்டர்கள் மற்றும் அதிகாரிகளை நான் தொடர்பு கொண்டு பேசிய போது, ஹர்கிரத் சிங் கூறியிருப்பது போல உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்தனர். பொதுவாக இதுபோன்ற உத்தரவுகள் தூதர் மூலம் வழங்கப்படுவதில்லை என்று அவர்கள் மேலும் கூறினார்கள்.

ஹர்கிரத் சிங் புத்தகம் வெளியாகி உள்ள நேரம், கேள்வியை எழுப்புகிறது. அவர் கூறியதை யாரும் நம்பத்தயாராக இல்லை. இவ்வாறு அதிகாரி ஜி.பார்த்தசாரதி தெரிவித்தார்.

இவர் பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதராகவும் பணியாற்றியுள்ளார். மூத்த இராணுவ அதிகாரி இதற்கிடையே இந்திய இராணுவத்தின் தென் பிராந்திய தளபதியாக பணியாற்றி வரும், இலங்கையில் இருந்த அமைதிப் படை நடவடிக்கைகளுக்கு ஒட்டுமொத்த தலைமை தளபதியாக பதவி வகித்தவருமான, ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி தீபிந்தர் சிங்கும், ஹர்கிரத் சிங் கூறியதை நிராகரித்துள்ளார்.

ஹர்கிரத் சிங் கூறியிருப்பது முற்றிலும் அர்த்தமற்றது. அதில் எந்த உண்மையும் இல்லை. விடுதலைப்புலி தலைவர் பிரபாகரன் தனிப்பட்ட முறையில் ஒருபோதும் குறிவைக்கப்படவில்லை. ஒருவேளை ஹர்கிரத் சிங் கூறியது போல ஏதாவது உத்தரவு வந்து இருக்குமானால், அது பற்றி எனக்குத் தான் முதலில் தெரிய வந்திருக்கும் என்று தீபிந்தர் சிங் தெரிவித்தார். (அ-5)

## இராசிபலன்

10.12.2007
(கார்த்திகை 24, திங்கட்கிழமை)
பிரதமை பின்னிரவு 01.18 மணிவரை
கேட்டை பிற்பகல் 01.12 மணிவரை
இராகுகாலம் 07.49 -09.19 மணிவரை
சுபநேரம் 12.19-01.49 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | உடல் உழைப்பு, பிரயாணம், பெரியோர் சந்திப்பு, முயற்சி தாமதம். |
| இடபம் | வாகனம் பயம், எதிரிகள் தொல்லை, காரிய தாமதம், போசனசுகம். |
| மிதுனம் | குடும்ப மகிழ்ச்சி, அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், போசனசுகம். |
| கடகம் | சுகவாழ்வு, சுவாரஸ்யம், முயற்சி கை கூடும், திடீர் பயணம். |
| சிங்கம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, ஆரோக்கியக் குறைவு, மனச்சஞ்சலம். |
| கன்னி | கல்வியில் ஆர்வம், தனவிரயம், முயற்சி தாமதம், திடீர் நன்மை. |
| துலாம் | சகோதரர் வழி நன்மை, காரிய அனுகூலம், பொருள்சேர்க்கை, போசன சுகம். |
| விருச்சிகம் | மரியாதைக் குறைவு, முயற்சி தாமதம். அதிக செலவு, உடல்நலக்குறைவு. |
| தனுசு | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி. |
| மகரம் | அலைச்சல், சுபசெலவு, தொழில் நன்மை, முயற்சி தாமதம். |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, பாராட்டு, மனமகிழ்ச்சி. |
| மீனம் | நல்ல செய்தி, அதிக பிரயாசை, அதிகாரம், நண்பர்கள் உதவி. |

வ ள வ ன்

## 25 குதிரைவலு மோட்டர்கள் பாவனைக்கு அரசு அனுமதி

அரசு, மீனவர் சமுதாயத்திற்கு 25 குதிரை வலுக்கொண்ட என்ஜின்களை பாவிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு இணங்கியுள்ளதாக அகில இலங்கை மீனவர் சமூக தொழிற்சங்க செயலாளர் எம்.விஜேந்திரா தெரிவித்துள்ளார்.

30 குதிரை வலு என்ஜின்களைப் பாவிப்பதற்கு இருந்த தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும். இருந்தாலும் தற்போதைய பாவனையாளர்கள் கைதுசெய்யப்படமாட்டார்கள். மீனவர் சங்கங்கள் 40குதிரைவலுக் கொண்ட என்ஜின் களை கடற்படைக்கு கையளித்து அதற்கு பதிலாக 25 குதிரைவலுக் கொண்ட என்ஜின் களை பெற்றுக்கொள்வதற்கு இணங்கியுள்ளது.

இத் தீர்மானம் அண்மையில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருடனான சந்திப்பின் போது எடுக்கப்பட்டது. இச் சந்திப்பின்போது கடற்படை அதிகாரி மீன்பிடி அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரும் கலந்துகொண்டனர். தடைகள் விலக்கப்பட்ட செய்தி வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். (அ-6)

## முகாமைத்துவ உதவியாளர் 1500 பேர் நியமனம்

இலங்கை இராஜாங்க அமைச்சு 1500 முகாமைத்துவ உதவியாளர்களை புதிய நியமனம் செய்ய திட்டமிட்டுள்ளது.

இப் புதிய முகாமைத்துவ உதவியாளர்களுக்கு பொதுச்சேவை பயிற்சி நிறுவனத்தினால் சிறியளவிலான பயிற்சி வழங்கப் படும். பொதுநிர்வாக அமைச்சர் கரு ஜயசூரியா வரும் திங்கட்கிழமை இதனை வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார். (அ)

# இந்திய கடற்படை அதிகாரியின் கருத்தை கண்டித்து பிரதமருக்கு வைகோ கடிதம்

(சென்னை)

இந்திய மீனவர்கள் மீது வேண்டுமென்றே இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை என்று இந்திய கடற்படை அதிகாரி தெரிவித்திருப்பதற்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்திற்கு ஆயுத உதவிகளைச் செய்வதை இந்தியா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும், ஏற்கனவே வழங்கிய ராடர்களை திரும்பப் பெறவேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன் சிங்கை அவர் வலியுறுத்தியுள்ளார். மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, பிரத மருக்கு இன்று எழுதியுள்ள கடிதத் தில் கூறியிருப்பதாவது,

"பாக் நீரிணையில் ஒருபோதும் இலங்கை கடற்படை வேண்டுமென்றே இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை. பன்னாட்டுகடல் எல்லையில் இலங்கை கடற் படைக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடக்கின்ற துப்பாக்கிச் சண்டையில் இந்திய மீனவர்கள் வந்துமாட்டிக் கொள்கிறார்கள்.

மேலும் மீனவர்கள் குற்றம் சாட்டுவதுபோல இலங்கை கடற்படை படகுகள் ஒருபோதும் இந்திய கடல் எல்லைக்கு உள்ளே வந்து இந்திய மீனவர்களை தாக்கியது இல்லை" என்று இந்தியக் கடற்படையின் தமிழ் நாடு பொறுப்பாளர் கமோடர் வேன் ஹேல்டரென் கூறியதாக பத்திரிகைகளில் வெளியாகி உள்ள நியாயப்படுத்த இயலாத, உண்மையில்லாத, பொறுப்பற்ற கருத்துக்களை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

கடற்படையினர் இவ்வாறு இலங்கை அரசுக்கு ஆதரவாக அறிக்கைகள் வெளியிட்டும், கருத்துக்களை வெளியிட்டும் வருவது மிகுந்த கவலையளிக்கிறது. அவர்கள் இந்தியக் கடற்படையில் பணியாற்றுகிறார்களா? அல்லது இலங்கை கடற்படைக்காக பணியாற்றுகிறார்களா? என்றஐயத்தைஏற்படுத்துகிறது.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டது குறித்து இந்திய அரசே நாடாளுமன்றத்தில் பல முறை ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கைக் கடற்படைக்கு உதவ வேண்டும் என்று திட்டமிட்ட நோக்கத்துடன், இந்தியா செயல்படுவதும், இந்திய கடற் படை அதிகாரிகள், எல்லையை மீறி கருத்துக்களை வெளியிட்டு இலங்கையை ஆதரிப்பதும் எதைக் காட்டுகிறதென்றால், நேருவால் வகுக்கப்பட்டு, இந்திராகாந்தியால் செயல்படுத் தப்பட்ட இந்தியாவின் வெளியுறுவுக் கொள்கை குழி தோண்டி புதைக்கப்பட்டு விட்டதோ என்பதைத் தான் காட்டுகிறது.

அதைவிடக் கொடுமை, இந்திய கடற் படையினர் இந்திய மீனவர்களைப் பாதுகாப்பதற்காக எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொண்டது இல்லை. ஒருமுறையேனும் இலங்கை கடற்படைக்கு அவர்கள் எச்சரிக்கை கூட விடுத்ததும் இல்லை.

எனவே, இலங்கை படையினருக்கு ஆயுத உதவிகள் செய்வதை இந்தியா நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும்.

ஏற்கனவே இலங் கை விமானப்படைக்கு வழங்கிய ராடர்களை உடன டியாக திரும்பப் பெற வேண்டும் என்றும், தங்கள் எல்லையை மீறிச் செயல்பட்டு வருகின்ற இந்திய கடற்படை அதிகாரிகளை எச்ச ரிக்கை செய்ய வேண்டும் என்றும் தங்களை கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு வைகோ தனது கடிதத்தில் கூறியுள்ளார். (அ-5)

# அயல்நாட்டு மாணவர்களுக்கு அன்பான உபசரிப்பு உதவித்தொகை வழங்கி வரவேற்கும் தென்கொரியா

பூகோள ரீதியில் பார்த்தால் கொரிய தீபகற்பம், வியூக முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பகுதியில் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளின் அருகே அமைந்துள்ளது. கொரியாவின் வரலாற்றை பார்த்தால், கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டிய நில அமைப்பு கொண்டநாடாக இருப்பது தெரியவரும். இருந்தபோதிலும், 1960ஆம் ஆண்டு முதல் வளர்ச்சியை இலக்காக கொண்ட பொருளாதார கொள்கைகளை கொரியா அமுல்படுத்தியதால் பொருளாதாரத்தில் பிரமிக்கத்தக்க சாதனையை படைத்துள்ளது. கொரியப் போர் முடிவடைந்து 40 ஆண்டுகளுக்குள் கொரியா வியத்தகு பல சாதனைகளை படைத்துள்ளது.

1988ஆம் ஆண்டு 24 ஆவது ஒலிம்பிக் போட்டியை சியோலில் வெற்றிகரமாக நடத்தி முடித்தது. அண்மையில் உலக வர்த்தக அமைப்பிலும், தென்கொரியா சேர்த்துக் கொள்ளப்பட்டது. கொரிய மக்களின் சோர்வில்லாத உழைப்பு காரணமாக, பழைய பாதிப்புக்களிலிருந்து மீண்டு அந்நாடு வெற்றிச்சிகரத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறது.

அன்னிய முதலீட்டாளர்களுக்கு தனது சந்தையை திறந்து விட்டுள்ள கொரியா, பெருமளவில் அன்னிய முதலீடுகளை ஈர்த்து வருகிறது. இதனால் சர்வதேச சமூகத்தில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக தென்கொரியா உருவெடுத்துள்ளது. மேலும் அயல்நாட்டு மாணவர்களை ஈர்க்க தென்கொரிய கல்வி நிறுவனங்கள் தற்போது பெரும் ஆர்வம் காட்டிவருகின்றன.

கொரியாவில் நான்கு பருவகால சூழ்நிலை நிலவுகிறது. வசந்த காலம், இலையுதிர் காலம், கோடை காலம், குளிர்காலம் என நான்கு விதமான காலநிலை காணப்படுகிறது. கோடைகாலத்தில் ஈரக்காற்று வீசும். இலையுதிர்காலத்தில் இதமான காற்று வீசுவதுடன், வானம் பளிச்சென்று இருக்கும். இதனால், இலையுதிர்காலம் எப்போது வரும் என கொரிய மக்கள் ஏங்குவது வழக்கமான ஒரு நிகழ்வாகும். அந்தளவுக்கு இக்கால கட்டத்தில் ரம்மியமான சூழ்நிலை நிலவும். கொரியாவில் இடத்திற்கு இடம் வெப்ப நிலை மாறுபடும். கொரிய மக்கள் அனைவரும் ஒரே மொழியை தான் பேசுகின்றனர். அதனால் அவர்களின் தேசிய அடையாளம் மிகவும் வலிமையாக



இருக்கிறது. கொரிய கலாசாரத்தில் பல்வேறு மதங்களின் தாக்கம் இருக்கிறது. சாமனிஷம், பௌத்தம், தாவோயிஷம், கன்ஃபியூசியனிசம் ஆகிய மதக் கோட்பாடுகளை கொரியர்கள் பின்பற்றுகின்றனர். கிறிஸ்தவ மதமும் இங்கு வேரூன்றியுள்ளது.

**அயல்நாட்டு மாணவர்களைகொரியா, கவர்ந்திழுக்கும் ரகசியம் என்ன?**

கொரியாவின் தகவல் தொழில்நுட்பம், உலகின் தலைசிறந்த தொழில்நுட்பங்களுள் ஒன்றாக இருக்கிறது. இயந்திரங்கள் உற்பத்தி இரசாயனம், கப்பல்கட்டுமானம், வாகன உற்பத்தி ஆகிய தொழில்களில் உலகின் முன்னணி நாடுகளுள் ஒன்றாக இருக்கிறது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் கையடக்கத் தொலைபேசி தகவல் தொடர்பில் தென்கொரியா உலகில் முதலிடத்தில் உள்ளது. கொரியாவில் அனைத்து வீடுகளிலும் இணையத்தள வசதி உள்ளது. தொழில் நுட்பத்துறையில் தொடர்ந்து சாதனை படைத்துவரும் தென் கொரியா வளர்ந்து வரும் புதிய துறைகளிலும் தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட கவனம் செலுத்தி வருகிறது. அண்மையில் சியோல் தேசிய பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழு பயோ இன்ஜினியரிங்கில் படைத்த சாதனையால் உலகத்தின் கவனத்தை கவர்ந்தது. தென்கொரியாவில் ஆராய்ச்சி படிப்புகளில் சேர்ந்து படித்தால் மிகவும் அதிநவீன தொழில் நுட்பங்களை கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.

**குறைந்த கல்விக் கட்டணம்**

ஆங்கிலம் பேசப்படும் மேற்கிந்திய நாடுகளான அமெரிக்கா, கனடா அல்லது இங்கிலாந்து போன்ற நாடுகளுடன்ஒப்பிடும்போது கொரியாவில் வாழ்க்கை நடத்துவதற்கான செலவு மிகவும் குறைவாகும். அதே போல், டியூசன் கட்டணமும் குறைவாகத்தான் இருக்கிறது. இதனால் அயல் நாட்டு மாணவர்கள் எவ்வித பொருளாதார நெருக்கடியும் இல்லாமல் இங்கு கல்வி கற்கலாம். அண்மையில் அயல் நாட்டு மாணவர்களை ஈர்ப்பதற்காக, கொரிய அர சாங்கம் பல்வேறு சலுகைகளை அறிவித்தது. அதன்படி அயல் நாட்டு மாணவர்களுக்கு உதவித் தொகை தங்குவதற்கு இடம், பகுதி நேர வேலை பார்ப்பதற்கும், பட்டப் படிப்பு முடித்தவுடன் வேலை வாய்ப்பை பெறுவதற்கும் குறைந்தளவிலான கட்டுப்பாடு போன்ற சலுகைகள் அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஆசிய மாண

வட்டு. நிவாஷன்

வர்கள் குறைந்த செலவில, தரமான கல்வியைப் பெறுவதற்கு தென் கொரியா சிறந்த இட மாகத் திகழ்கிறது என்றால் வியப்பில்லை.

**தரமான கல்வி**

கொரியாவில் 400க்கும் மேற்பட்ட உயர் கல்வி நிறுவனங்கள் அமைந்திருக்கின்றன. அங்குள்ள உபகரணங்கள் மற்றும் வசதிகள் மிகவும்தரம் உயர்ந்தவையாகும். ஆய்வக வசதிகள், மாண்வர்களுக்கான ஓய்வறை மற்றும் உடற்பயிற்சி நிலையம் ஆகியவை மாணவர்களுக்கு திருப்தியளிக்கும் வகையில் அமைந்துள்ளன. அதேபோல், கல்வி நிறுவன வளாகங்களில் மிகவும் அமைதியான சூழ்நிலை நிலவுகிறது. கொரிய கல்வி நிறு வனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெரும் பாலோனோர் ஆராய்ச்சிப்படிப்பை (பி.எச்.டி) முடித்தவர்களாக இருக்கின்றனர். (தொடரும்)

# சைபர் சட்ட படிப்பு படிக்க ஆசையா?

தற்போதைய விஞ்ஞானவளர்ச்சிக்கு ஏற்ப, இணையத்தளம் சார்ந்த ஆன்லைன் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. அதனால், அவற்றை கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் அனைத்து நாடுகளும் உள்ளன.

இது தொடர்பாக பல்கலைக்கழகங்களில் புதிய பாடப்பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்துறையைப்பற்றிய் விபரங்களை தெரிந்துகொள்ளவும், நிபுணத்துவம் பெறவும் இதுபோன்ற படிப்புகள் மிகவும் பயனுள்ள வகையில் இருக்கின்றன.

இந்தியாவின் புனே நகரில் உள்ள ஏசியன் ஸ்கூல் ஆஃப் சைபர் லாஸ், சைபர்லா படிப்பை அஞ்சல் வழியில் அளிக்கிறது. இதை மஹாராஷ்டிர அரசும் அங்கீகரித்துள்ளது. இப்படிப்புக்கான கட்டணம் ரூ.3,500 இந்திய மதிப்பில்), நீதிபதிகள், பொலிஸ் இராணுவ அதிகாரிகள், வழக்கறிஞர்கள், சார்ட்டர்ட் அக்கவுண்டுகள், கம்பெனி செயலாளர்கள் என பல்வேறு உயர் பதவியில் இருப்பவர் .கள்.

இதில் படித்திருக்கின்றனர். விண்ணப்பிக் கும் முறை, விண்ணப்பப்படிவம் போன்ற விபரங்களை (http:/www.asianl aws.or g/dcl) என்ற இணையத்தளத்தி லிருந்து டவுன் லோடு செய்துகொள்ளலாம். அக்டோபர் மாதம் இந்த படிப்பு தொடங்கப்படவுள்ளது.

# இலத்திரனியல் வர்த்தகம் E-Commerce

4.0) இணையமும் மின்வணிகமும்.
**(Internet & E-Commerce)**

இணையம் என்பது வலைப்பின்னலின தொகுப்பாகும். (Network of Networks). இலததிரனியல் வர்த்தகத்தின் செயற்பாட்டை நோக்குகின்ற போது உலகில் 150 மில்லியனுக்கு அதிகமான மக்கள் தற்போது இணையத்தினை பயன்படுத்திக் கொண்டிருக்கினறனர். இணையப் பயன்பாடு பிரபல்யமானதைத் தொடர்ந்து வர்த்தகர்கள் இணையத் தளங்களை உருவாக்கி தமது வியாபாரத்தினை மேம்படுத்துகின்றனர்.

இணையப் பக்க வடிவமைப்பு என்பது முக்கியமாக காணப்படுகின்றது. தொடர்ச்சியாக இணையப் பக்க செய்திகளில் மாறறங்களைக் கொண்டு வருவது அவசிய மானதாகும். ஏனெனில் இணையப் பக்கங்களினைப் பார்வையிடுபவர்கள் பக்க செய்திகளை மதிப்பிடுதலில் கூடுதல் நாட்டம் கொண்டிருக்கின்றனர். இதனால் இணையத்தள நன்மதிப்பினைப் பெறமுடியும். பிரபல நிறுவனங்களுடைய வர்த்தக செயற்பாடுகள் அனைத்தும் இணையத்துடன் பின்னிப்பினைந்ததாகவே காணப்படுகின்றன.

இணையப் பக்கங்களினை Dream Wea ver, MS Frontpage போன்ற Application S/W ஊடாகவும் HTML, XML, Java Script, JSP போன்ற Programming ஊடாகவும் இலகுவாக வடிவமைக்கலாம். நிறுவனத்திற்கென Domain ஒன்றினை நிறுவி அந்தப் பெயரினை பதிவு செய்ய வேண்டும்.

நாளுக்கு நாள் இணையத்தினை பயன படுத்துபவர்களின் எண்ணிக்கை கணககிலடங்காமல் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. எனவே Bandwidth என்பது மின் வணிகப பராமரிப்பில் முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

Bandwidth இன் வேகம் அதிகமாக உள்ள இணைய இணைப்பினைப் பெற்றிருககிறபோது தகவல் பரிமாற்றம் வேகமாக மாறுகின்றது. Modem, Telephone Line என்பன உயர்ந்த தரமாயின் தகவலைப பெறும் வேகமும், தகவலைக் கொடுக்கும் வேகமும் சிறப்பாக அமையும்.

5.0) இலத்திரனியல் வர்த்தகத்தின் நன்மைகளும் வரையறைகளும்.
**(The Benefits and Limitations of Electronic Commerce)**

*இலத்திரனியல் வர்த்தகத்தின் நன்மைகள்*

i) வர்த்தக விடயங்களை இலகு படுத்தியுள்ளது. விற்பனையாளரும் நுகர்வோரும் நேரடியாக சந்திக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் இங்கு தவிர்க்கப்படுகின்றன. இதனால் செலவு, நேரம், போக்குவரத்து சிக்கனங்கள் ஏற்படுகின்றன.

ii) சர்வதேச வர்த்தகமானது வள்ர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது. இலத்திரனியல் வர்த்தகத்தின் மூலம் உலகின் ஒரு மூலையில் அமைந்திருக்கும் சந்தையில் என்னென்ன பொருடகள் இருக்கின்றன என்பதனை உலகில் அனைத்துப் பிரதேசங்களில் இருக்கின்றவர்களும் தெரிந்து கொள்ள முடிகின்றது.

iii) 24 மணிநேரமும் இலத்திரனியல் வர்த்தகத்தின் மூலம் பொருட்களையும், சேவைகளையும் கொடுக்கல் வாங்கல் செய்யலாம்.

iv) வாடிக்கையாளர்கள் பொருத்தமானதும் விபரமானதுமான தகவலினைச் சில விநாடிகளில் பெற முடியும். பல நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

v) விற்பனையாளர்களுக்குப் பல தேவையற்ற செலவுகள் தவிர்க்கப்படுவதனால் பொருட்களின் விலைகள் குறைவடைய வாய்ப்புண்டு.

vi) நுகர்வோர்களிடையே கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் தமது அனுபவங்களை ஒப்பீடு செய்து கொள்வதற்கும் வசதியளிக்கின்றது.

இலத்திரனியல் வர்த்தகத்தின் வரையறைகள்

i) இலத்திரனியல் வர்த்தகத்தின் அடிப்படையான Internet இனைப் பாவிக்க முற்படுகின்ற போது ஏற்படுகின்ற இணைப்புச் செலவுகள் அதிகமாகக் காணப்படுகின்றமை.

ii) தொலைத் தொடர்பு அலைவரிசையின் அகலம் (Telecommunications band width) போதுமானதாகக் காணப்படவில்லை.

iii) வாடிக்கையாளர்கள் மாற்றத்தினை ஏற்க விரும்பாதிருத்தல். மேலும் செலவு கூடியதும் பாதுகாப்பற்றதுமான ஒன்று என்ற எண்ணம் மக்களின் மனதில் இருத்தல்.

iv) சட்ட ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப் படாதிருக்கின்றமை. அதாவது சட்டத்திற்குப் புறம்பான வர்த்தக செயற்பாடுகள் காணப்படுகின்றமை.

v) நிறுவன ரீதியாக பயிற்றுவிககப்பட்ட ஆளணிப் பற்றாக்குறையாக இருப்பதனால் இலத்திரனியல் வர்த்தகத்தினைப் பயன் படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றது.

vi) இலத்திரனியல் வர்த்தகம் கலாசாரச சீரழிவிற்கும், சிறுவர் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கும் பெரும் சவாலாக விளங்குகின்றது.

மேற்கூறிய தொழில்நுட்பம், தொழில் நுட்பம் சாராத வரையறைகள் இலத்திரனியல் வர்த்தகத்தில் காணப்படுகின்றன. இலத்திரனியல் வர்த்தகம் மூலம் அதிகளவு நன்மைகள் காணப்படுகின்ற அதே வேளை தீமைகள் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்படுகின்றன.

6.0) இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரயோகங்கள்:
**(Applications of Electronic Commerce)**

இலத்திரனியல் வர்த்தகம் பல்வேறுபட்ட துறைகளில் பிரயோகிக்கப்படுகின்றது. நிறுவனங்கள் தமக்கென உருவாக்கிய இணையத் தளங்களின் ஊடாக விளம்பரத்தினை மேற்கொள்கின்றன. எனவே இணையத்தள முகவரிகளை தெரிந்திருபபது மிகவும் இன்றியமையாதது. அவ்வாறான சில உதாரணங்களை நோக்குவோம.

i) **Ticketing:-**
**www.srilankan.lk**

ii) **Share Market:-**
www.csc.lk
www.cdax.lk
www.ceylincostockbrokers.com

iii) **Online Banks:-**
Commercial Bank - www. combank.lk
Seylan Bank - www.eseylan.com

iv) **Online Payment (Srilanka):-**
www.dialog.lk
www.slt.lk
www.billing.suntel.lk

v) **Web Hosting -Free**
www.geocities.com
www.freeservers.com
www.o-f.com
www.pages.google.com

vi) **Search Webs**
www.google.com
www.yahoo.com

(தொடரும்)

சீவரட்ணம் செல்வநாயகம்

# வன்னி மீதான இராணுவ முற்றுகையும் தெற்கில் அதிகரிக்கும் நெருக்கடிகளும்

கொழும்பில் தங்கியிருந்த தமிழ் மக்களை இலங்கைப் படையினர் ஆயிரக்கணக்கில் கைது செய்ததும், நூற்றுக்கணக்கில் தடுத்து வைத்திருப்பதும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடம் கடுமையான சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், அப்பாவி மக்களின் அடிப்படை உரிமைகள் கூட மதிக்



கப்படாத இந்த நடவடிக்கை குறித்து தங்களை ஜனநாயகத்தின் தலைமைகள் எனக் கூறிக் கொள்ளும் சர்வதேசமூகம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதனை உலகில் வாழும் தமிழ் இனம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. கண்டனங்கள், கவலைகள் ஒருபோதும் அரசின் இதே போன்ற எதிர்கால நடவடிக்கைகளைத் தடுக்கப்போவதில்லை.

இலங்கை அரசைப் பொறுத்தவரையிலும் தென்னிலங்கையில் அதன் பாதுகாப்புக்கள் மிகுந்த நெருக்கடி நிலையில் உள்ளதையே இந்த கைதுகள் காட்டுகின்றன. அதாவது பாதுகாப்புக் குறைபாடுகள் அரசாங்கத்தின் கைகளை மீறி சென்றுவிட்டதையே அப்பாவி மக்களின் கூட்டமான கைது எடுத்துக்காட்டியுள்ளது. கொழும்பின் நிலை இவ்வாறு இருக்கையில், வன்னியில் படையினர் தமது முற்றுகையை மெல்ல மெல்ல இறுக்கி வருகின்றனர். தொடர்ச்சியான வான்தாக்குதல்கள், படைநடவடிக்கைகள், ஆழ ஊடுருவும் படையினரின் தாக்குதல்கள் என வன்னி மீதான முற்றுகை படிப்படியாக அதிகரிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகின்றது. ஒருபுறம் பொருளாதாரத்தடைகள், போக்குவரத்துத்தடைகள், வெளி உலகுடனான தொடர்புகளை துண்டித்தல் என வன்னி மக்களை அந்நியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வரும் அரசு மறுபுறம் அதன் பொருளாதாரக்கட்டமைப்புக்களையும் தாக்கி அழித்து வருகின்றது. ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இயங்கி வந்த படகுகட்டும் தொழிற்சாலை, வர்த்தக நிலையங்கள், விவசாய நிலங்கள், தொலைத்தொடர்பு மையங்கள் என அரபடையினரின் வான்தாக்குதல்கள் விரிவாக்கம் பெற்று வருகின்றன. அதாவது 1990களின் பிற்பகுதியில் மோசமடைந்த வெற்றிநிச்சயம் படைநடவடிக்கையின் காலத்தில் ஏற்பட்ட ஒரு நெருக்கடிக்குள் வன்னி மண் சிக்குண்டுள்ளது. படைநடவடிக்கையை பொறுத்தவரையிலும் சத்தமின்றி மெதுவான ஒரு வெற்றி உறுதியை ஒத்த நடவடிக்கை நடைபெற்று வருகின்றது என்பதே உண்மை. படையினரின் பரம் பலை கருதினால் 10 பிரிவு படையினரும், சிறப்புப் படையினரும், கவசப்படையினரும் வன்னியை சுற்றியே குவிக்கப்பட்டுள்ளனர். மன்னார் களமுனையில் புதிதாக உருவாக்கம் பெற்ற 58ஆவது படையணியும், 21ஆவது படையணியும் நிறுத்தப்பட்டுள்ளன. மணலாற்றில் 59ஆவது படையணி நிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவின் எல்லைப் பகுதியில் 56 மற்றும் 57ஆவது படையணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. வடக்குப் புறமாக யாழ்.குடாநாட்டின் வாயிலில் 55,54 ஆவது படையணிகளும் உட்பகுதியில் 52,51ஆவது படையணிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. சிறப்புத்தாக்குதல் படையணியான 53ஆவது படையணியும் யாழ். குடா நாட்டிலேயே பெருமளவில் நிலைகொண்டுள்ளது. அதாவது இலங்கை இராணுவத்தின் 12 பிரிவுகளில் வடபோர்முனையில் 10 பிரிவுப் படையினர் நிலைகொண்டுள்ளனர். இந்த 10 பிரிவு படையினரையும், முதலாவது மற்றும் இரண்டாவது சிறப்புப் படைறெஜிமெண்டுகளையும், புதிதாக உருவாக்கம் பெற்ற கவசத்தாக்குதல் படையணிகளையும் பயன்படுத்தி ஒரு தொடர்ச்சியான நெருக்கடிகளை வன்னி மீது பிரயோகிப்பதே இந்த படை பரம் பலின் நோக்கம். ஆனால் ஜெயசிக்குறு காலப்பகுதியை கருதினால் யாழ். குடாநாட்டில் 51, 52 ஆவது படையணிகளும், ஆனையிறவில் 54 ஆவது படையணியும் நிலை கொண்டிருக்க, 53, 55 56 ஆவது படையணிகள் வவுனியாவில் படைநடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. அதே சமயம் 53 ஆவது 55ஆவது படையணிகளின் சில பிரிவினரும் 21 ஆவது படையணியும் இணைந்து மன்னார் பெருநிலப்பரப்பினுள்ளும் முன்நகர்ந்திருந்தது. ஏறத்தாழ 7 படையணிகள் வன்னி பெருநிலப்பரப்பின் கழுத்தை நெரிக்க முற்பட்டிருந்தன. தொடர்ச்சியாக 18 மாதங்கள் மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிந்த இந்த படைநடவடிக்கையில் 3,500 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 9,700 இற்கு மேற்பட்டோர் காயமடைந்திருந்தாகவும் படைத்தரப்பு தெரிவித்திருந்தது. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்தப்படைநடவடிக்கைகளை எதிர்த்து முறியடிப்பு சமர்களை நடத்தி வந்த விடுதலைப்புலிகள் ஓயாத அலைகள் -03 என்



னும் பெரும் படை நடவடிக்கைக்கும் தம்மை தயார் படுத்தி வந்ததை பின்னர் படைத்தரப்பு உணர்ந்து கொண்டது.

அதாவது படைத்தரப்பு விடுதலைப் புலிகளை முறியடிப்பதற்கு என வகுக்கும் உத்திகளை விடுதலைப்புலிகள் படைத்தரப்பை முறியடிக்க பயன்படுத்தி வருவது வழக்கம். தற்போதைய உத்திகளை கருதினாலும் தொடர்ச்சியான தாக்குதல்களின் மூலம் விடுதலைப்புலிகளின் வலிந்த தாக்குதல் உத்திகளை முறியடித்து விடலாம் என்பது படைத்தரப்பின் உத்தி. அதற்காகவே வன்னியை சுற்றி இராணுவத்தின் செறிவு அதிகரிக்கப்பட்டு வருகின்றது. கிழக்கில் இருந்து அகலக்கால் பதித்து வரும் படைத்தரப்பு, வன்னியின் மன்னார் பெருநிலப் பரப்பில் முன்நகர மேற்கொண்டு வரும் முயற்சிகள் கடந்த 9 மாதங்களுக்கும் மேலாக கடுமையான எதிர்த்தாக்குதல்களை சந்தித்து வருவதுடன், இழப்புக்களும் அதிகம். ஆனால், படைத்தரப்பின் கவனம் வன்னி மீது குவிந்துள்ள நிலையில் போர்க்களம் அம்பாந்தோட்டை வரை விரிவடைந்துள்ளதுடன், அம்பாறை, மட்டக்களப்பு என அது மெல்ல மெல்ல தீவிரமாகி வருகின்றது.

தற்போது எழுந்துள்ள முக்கியமான பிரச்சினை என்னவெனில் இலங்கைத் தீவின் வடமுனையான யாழ்குடாநாட்டில் இருந்து தென்முனையான அம்பாந்தோட்டை வரையிலும் விரிவடைந்துள்ள போர்க் களங்களை சமாளிப்பதற்கு இலங்கை அரசின் படைபலம் போதுமா என்பது தான். இந்த வருடத்தில் 27,000 பேர் இராணுவத்தில் இணைந்துள்ளதாக கூறிவரும் படைத்தரப்பு தற்போது இராணுவத்தில் 12 வருட சேவையை நிறைவு செய்த பின்னர் ஓய்வு பெற்றவர்களையும் மீண்டும் சேவைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது. இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரணான தகவல்களாகவே உள்ளன. ஏறத்தாழ 3 பிரிவு படையினர் புதிதாக சேர்ந்துள்ள நிலையில் ஓய்வுபெற்றவர்களை அழைப்பதன் நோக்கம் என்ன? இங்குமறைக்கப்பட்டுள்ள விடயம் ஒன்றும் உள்ளது.

அதாவது, கடந்த இரண்டு ஆண்டுகளில் இராணுவத்தில் இருந்து தப்பிஓடியவர்களின் எண்ணிக்கை இங்கு குறிப்பிடப்படவில்லை. வழமையாக போர்க்களம் உக்கிரமடையும் போதே தப்பிஓடும் படையினரின் எண்ணிக்கையும் அதிகரிப்பதுண்டு. இறந்ததும், காயமடைந்ததுமாக களமுனைகளில் இருந்து அகற்றப்படுவோர், விடுமுறையில் சென்று மீண்டும் திரும்பாதோர் என படைத்தரப்பின் வீழ்ச்சி விகிதம் மிகவும் அதிகமானது என்றே தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன. விடுதலைப்புலிகளை பொறுத்தவரையில் முன்நகரும் படையினருடனான தற்காப்பு சமர், ஆழஊடுருவும் அணியினரின் கெரில்லாத்தாக்குதல்கள், சிறப்புப் படை நடவடிக்கைகள் என்ற வட்டத்திற்குள் தமது தாக்குதல் உத்திகளை மட்டுப்படுத்தி வருகின்றனர். அதாவது தமது முன்னணி அணிகளை சேதமடையாது பாதுகாத்து வருகின்றனர். இந்த ஆண்டின் ஜூன் மாதம் நடைபெற்ற விளாத்திக்குளம் சமரைத்தவிர அவர்கள் எந்தவொரு வலிந்த சமர்களிலும் ஈடுபடவில்லை.

நடைபெற்றுவரும் சமர்களில் விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி படையணி, இம்ரான்- பாண்டியன் படையணி, ஜெயந்தன் படையணி போன்ற சிறப்புப் படையணிகள் களமிறக்கப்படவும் இல்லை. அதற்கான காரணங்களும் உண்டு படையினரின் வலிந்த உத்திகளில் தமது படையணிகளை சிதைக்க விடுதலைப்புலிகள் விரும்பப்போவதில்லை. ஒரு சிறந்த படை வீரனை உருவாக்குவதற்கு 3 தொடக்கம் 5 வருடங்கள் செல்லலாம் என்பது படைத்துறை நிபுணர்களின் கருத்து. எனவே தான் சாதகமற்ற களமுனைகளில் தமது படையினரை பாதுகாப்பதில் போரிடும் தரப்புக்கள் அதிக அக்கறை காட்டி வருவதுண்டு. அதிலும் சிறப்புப் படையணிகளை உருவாக்குவதற்கு மிகவும் அதிக காலம் எடுக்கும். அதாவது படையினரின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப தமது சிறப்புப் படையணிகளை விடுதலைப் புலிகள் நகர்த்தப்போவதில்லை. மாறாக அவர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப அவை விரைவில் களமிறங்கலாம் என்பதும் தென்னிலங்கையில் தற்போது பலமான எச்சரிக்கையாக எழுந்துள்ளது.

ஆனால், படையினரின் உத்திகள் வேறுபட்டவை அதாவது விடுதலைப்புலிகளை வலிந்த சமருக்கு இழுக்கின்றோம் என எண்ணியபடி தமது முன்னணி படையணிகளை அவர்கள் கணிசமான அளவில் இழந்து வருகின்றனர். விடுதலைப்புலிகளும் படையினருக்கு சாதகமற்ற களங்களில் வைத்து அவர்களின் முன்னணி படையணிகளை சிதைப்பதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். அதற்கு கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம், இந்த வருடம் நவம்பர் மாதங்களில் முகமாலையில் நடைபெற்ற சமர்களையும், விளாத்திக்குளம், மன்னார்ப்பகுதிகளில் நடைபெற்றுவரும் சமர்களையும் குறிப்பிடலாம்.

கடந்த முதலாம் திகதி காலையும் மன்னாரின் வடமுனையில் உக்கிர சமர் வெடித்திருந்தது. அன்று காலை படையினர் மாந்தையை கைப்பற்ற முனைந்திருந்தனர். இந்த நடவடிக்கையில் புதிதாக அமைக்கப்பட்ட 58 ஆவது படையணி ஈடுபட்டதுடன், அதனை அதன் கட்டளைத்தளபதி பிரிகேடியர் சவேந்திரா சில்வா வழிநடத்தியிருந்தார். 58ஆவது படையணியின் பிரிகேட் கட்டளைத்தளபதிகளான கேணல் சுஜுவா, கேணல் வன் சஜயா, கேணல் கெசான் சில்வா ஆகியோரின் களமுனை வழிநடத்தலில் 4,500 இற்கும் மேற்பட்ட படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். கடுமையான பீரங்கி மற்றும் பல்குழல் உந்து கணை செலுத்திகளின் தாக்குதலுடன் பல மணி நேரம் நடைபெற்ற இந்த சமரில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், 26 பேர் காயமடைந்துள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

ஆனால் படையினரின் இழப்புக்கள் மிகவும் அதிகம் என சுயாதீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதன்பின்னர் கடந்த புதன்கிழமை மாலை மன்னார் மாவட்டத்தில் உள்ள குறிசுட்டகுளம் பகுதியை நோக்கி முன்நகர முயன்ற இராணுவத்தின் 1 ஆவது சிறப்புப் படைறெஜிமெண்ட் படையினரும், 58ஆவது படையணியின் பற்றலியன் துருப்புக்களும் கடும் எதிர்த்தாக்குதல்களை சந்தித்துள்ளன. இந்த மோதல்களில் 10 இற்கு மேற்பட்ட சிறப்புப் படையினர் கொல்லப்பட்டதாகவும், 4 படையினரின் சடலங்களும், ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகளின் 81 மி.மீ, 120 மி.மீ மோட்டார்த்தாக்குதல்களிலும், பொறிவெடிகளிலும் சிக்கியே படையினர் அதிக இழப்புக்களை சந்தித்து வருவதாக படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் நடைபெற்ற சமர்களிலும், மன்னார், வன்னி மற்றும் யாழ் முன்னரங்க களமுனைகளிலும் படையினரின் 53 ஆவது, 57 ஆவது தாக்குதல் படையணிகளும் 1 ஆவது, மற்றும் 3 ஆவது சிறப்புப் படையணிகளும் கடும் இழப்புக்களை சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட 58 ஆவது படையணியும் இழப்புக்களை சந்திக்க ஆரம்பித்துள்ளது. இந்தப் புதிய அணிகள் ஏனைய இராணுவப் படையணிகளில் உள்ள மிகவும் சிறந்த சிப்பாய்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே அதிகம் சிறப்பு அனுபவங்களைக் கொண்ட படையினரை இராணுவம் களமுனைகளில் இழந்து வருவதுடன், அதிக அனுபவம் கொண்ட படையினர் பலர் தப்பி ஓடி வருவதும் படையினரின் பலத்தில் ஏற்பட்டுவரும் கடுமையான சேதங்களாகும். அரசாங்கத்தின் கூற்றுப்படி 27,000 படையினர் படையில் இணைந்துள்ளதாக வைத்துக்கொண்டாலும் அவர்கள் முழுமையான ஒரு சிறந்த பயிற்சி பெற்ற இராணுவச் சிப்பாயாக மாற்றம் பெறுவதற்கு 3 தொடக்கம் 5 வருடங்கள் செல்லலாம். அதாவது 2012 ஆம் ஆண்டிற்கு பின்னர் அவர்கள் போர்த்தகைமை உடையவர்களாக மாற்றம் பெறலாம். ஆனால் களமுனை அது வரை பொறுத்திருக்கப்போவதில்லை. எனவே தான் உலகின் முன்னணி படைபலம் கொண்ட நாடுகள் கூட தமது படையினரை சாதகமற்ற களமுனைகளில் களமிறக்குவதில்லை என்பதுடன் எதிர்த்தரப்பின் தரம் வாய்ந்த படையணிகளை தாக்கி அழிப்பதிலும் குறியாக இருப்பதுண்டு.

**வேல்ஸிலிருந்து அருஷ்**

உதாரணமாக ஈராக்கின் குடியரசுப்படை எனப்படும் சிறப்புப் படையணிகளை தாக்கி அழிப்பதில் அமெரிக்கா முனைப்புக் காட்டி வந்ததை இங்கு குறிப்பிடலாம். ஈராக்கின் படைகட்டுமானங்களை சிதைத்த பின்னரே அமெரிக்கா தனது படையணிகளை முனைப்பாக களமிறக்கியிருந்தது. அதாவது போரியலில் இரு உத்திகள் உண்டு, ஒன்று எமது அனுபவம்மிக்க படையணிகளை தக்கவைப்பது, மற்றையது எதிரியின் அனுபவ மிக்க படையணிகளை அழித்துவிடுவது. ஆனால் இலங்கையில் அரசியல் இலாபங்களுக்காக புதிதாக திறக்கப்பட்ட பல களமுனைகளை தக்கவைப்பதற்காகவும், பதில் தாக்குதல்களினால் ஏற்படும் அரசியல் சரிவுகளை தவிர்ப்பதற்காகவும் அனுபவம் மிக்க படையினர் அகலக்கால் பதித்து அழிவை சந்தித்து வருகின்றனர்.


விடுதலைப்புலிகளின் படையணிகளை வலிந்த சமருக்கு இழுத்து அழித்துவிடும் உத்தியைக் கொண்டு களமிறங்கிய படையினர் தற்போது அதற்கு மறுதலையான விளைவுகளை சந்தித்து வருகின்றனர் என்பதுடன் இலங்கை முழுவதையும் போருக்குள்ளும் தள்ளியும் விட்டுள்ளனர் என்பதுமே யதார்த்தமானது. ஆனால், ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் தீவிர போருக்குள் மூழ்கும் போது படையினர் எதனை தக்கவைக்கப் போகின்றனர் என்பது தான் தற்போது எழுந்துள்ள முக்கியமான கேள்வி?

நன்றி வீரகேசரி வார வெளியீடு

# ஐ.சி.எல்.இருபது–20 போட்டியில் அரையிறுதிக்கு சென்னை சூப்பர்ஸ்டார்

(பஞ்சகுலா)

சண்டிகர் லயன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் அபாரமாக விளையாடிய சென்னை சூப்பர்ஸ்டார்ஸ் 4 விக்கெற் வித்தியாசத்தில் வென்று, முதல் அணியாக அரையிறுதிக் குள் நுழைந்துள்ளது.



இந்தியன் கிரிக்கெற் லீக் (ஐ.சி.எல்) அமைப்பு நடத்தும் இருபது–20 தொடர் பஞ்சகுலாவில் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் சென்னை சூப்பர் ஸ் டார்ஸ் அணி, சண்டிகர் லயன்ஸ் அணியுடன் மோதியது. நாணயச்சுழற்சியில் வென்ற சண் டிகர் லயன்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது. துவக்க வீரர்கள் இம்ரான் பர்கத்(2) , ஹமிஷ் மார்ஷல் (2) விரைவில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித் தனர்.

இதையடுத்து மணிஷ்சர்மா, தேஜிந்தரு டன் ஜோடிசேர்ந்தார். அதிரடியாக விளை யாடிய இந்த ஜோடி சென்னை சூப்பர் ஸ்டார்ஸ் பந்துவீச்சை வெளுத்து வாங்கியது .3 சிக்சர் 3 பவுண்டரி விளாசிய மணிஸ் 36 ஓட்டங்கள் எடுத்தார். தேஜிந்தர் ஒரு சிக்சர் 5 பவுண்டரிக ளுடன் 47 ஓட்டங்கள் எடுத்தார். சேட்டன் சர்மா 26 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் விரைவில் வெளியேற, சண்டிகர் லயன்ஸ் 20 ஓவரில் 146 ஓட்டங்கள் எடுத்தது. இதைய டுத்து களமிறங்கிய சென்னை சூப்பர்ஸ்டார் சுக்கு ஹார்வி அசத்தல் துவக்கம் ஏற்படுத்தி கொடுத்தார். இவர் 48 ஓட்டங்கள் எடுத்தார். கிறிஸ்ரீட் 18 அர்னால்டு 17 ஓட்டங்கள் எடுத்த னர். அடுத்து வந்த பதானி 2 சிக்சர் , 1 பவுண் டரியுடன் 9 பந்தில் 17 ஓட்டங்கள் எடுத்தார்.

ஸ்டுவர்ட்லா 13, சரவணன் 11 ஓட்டங்களு டன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். சென்னை சூப்பர் ஸ்டார்ஸ் 19.5 ஓவரில் 6 விக்கெற் இழப் புக்கு 147 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெற் வித் தியாசத்தில் வென்றது. (அ–5)

# இரட்டைச்சதம் அடிக்காதது ஏமாற்றம் அளிக்கிறது அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ்சிங் பேட்டி

டெண்டுல்கர் , டோனி காயம் அடைந்த தால் பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ் டில் வாய்ப்புபெற்ற அதிரடி ஆட்டக்காரர் யுவ ராஜ்சிங் 169 ஓட்டங்கள் குவித்து அசத்தினார். யுவராஜ்சிங் 16 மாதங்களுக்கு பிறகு ஆடிய முதல் டெஸ்ட் இதுவாகும். இதற்கு முன்பு கடைசியாக 2006ஆம் ஆண்டு ஜுலை மாதம் வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான டெஸ்டில் ஆடியிருந்தார்.

முதல்நாள் ஆட்டம் முடிந்த பிறகு யுவராஜ் சிங் நிருபர்களிடம் கூறியதாவது,

டெஸ்ட் அணியில் இடம்கிடைப்பது கடி னம் என்பது எனக்கு தெரியும். ஏனெனில் நமது அணியில் டிராவிட் , டெண்டுல்கர், கங் குலி, லட்சுமண் போன்ற மிகச்சிறந்த வீரர் கள் உள்ளனர். இவர்கள் டெஸ்டில் சிறப்பான சாதனைகளை படைத்து இருக்கிறார்கள். இத னால் அணியில் இடம்பெற முடியாமல் இருக் கிறது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண் டும் என்பது தான் இப்போது எங்களது எண் ணம்.

அதன்பிறகு தான் அவுஸ்திரேலிய தொடர் குறித்து பேசமுடியும். இருப்பினும் அவுஸ்தி ரேலிய தொடரிலும் நான் வெளியே உட்கார வைக்கப்பட வாய்ப்புள்ளது. வெஸ்ட் இண்டீஸ் டெஸ்ட் தொடரில் நான் சரியாக ஆடவில்லை அதன்பிறகு நடுவரிசையில் இருப்பவர்கள் சிறப்பாக ஆடி வருகிறார்கள். எனவே அணி யில் இீடம்பெற முடியாமல் போனதற்கு என்னை நானே குற்றம் சொல்லிக்கொள்ள வேண்டும்.

இந்த ஆட்டத்தில் கங்குலி எனக்கு மிகவும் உதவிகரமாக இருந்தார்., நாங்கள் இரண்டு பேரும் அடித்து ஆடக்கூடியவர்கள். அவருடன் இணைந்து ஆடியது மகிழ்ச்சியாக இருந்தது.



நான் ஒரு ஷாட் அடித்ததை பார்த்து கங்குலி என்னிடம், என்னப்பா துடுப்பில் ஸ்பரிங் வைத் திருக்கிறாயா என்று வேடிக்கையாக கேட்டார். நீண்ட இடைவெளிக்கு பிறகு டெஸ்டில் ஆடியதால் எனக்கு ஒரு வித பதட்டம் இருந்தது. அதுவும் இதுபோன்ற இக்கட்டான (61 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்) சூழலில் நான் ஆடியது கிடை யாது

சமி பந்தில் முதல் பவுண்டரி அடித்ததும் எனக்கு நம்பிக்கை அதிகரித்தது. அதன் பிறகு நேர்மறை சிந்தனையுடன் ஆடினேன். இதில் நான் இரட்டை சதம் அடித்திருக்க வேண்டும். 169 ஓட்டங்களில் ஆட்டம் இழந்து இரட்டை சதமாக மாற்ற முடியாமல் போனது ஏமாற்றம் அளித்தது. இருப்பினும் 4 விக்கெற்றுக்கு 61 ஓட்டங்களில் இருந்து அணியை நல்ல நிலைக்கு கொண்டு வந்தது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த இன்னிங்ஸில் நாங்கள் 500 ஓட்டங்களை எடுத்தால் அது சிறந்த ஸ்கோராக இருக்கும் இவ்வாறு யுவராஜ்சிங் கூறினார்.(அ–5)

# டோனியின் புதிய காதலி நடிகை கங்கானா

கிரிக்கெற் வீரர்களுக்கும், நடிகைகளுக் கும் எப்போதும் தொடர்புஉண்டு. சில வீரர்கள் திருமணம் வரை செல்வார்கள். சிலர் பாதியி லேயே கைகழுவி விடுவார்கள். முன்னாள் அணித்தலைவர் மன்சூர் அலிகான் பட்டோடி, அசாருதீன், ரவி சாஸ்திரி ஆகியோர் இந்தி நடிகைகளை திருமணம் செய்துகொண்டனர்.

இந்திய அணியின் தலைவராக இருக்கும் டோனியும் அந்த வரிசையில் உள்ளார். ஓம் சாந்தி ஓம் படத்தில் நடித்த தீபிகா படு கோனே யுடன் அவர் சுற்றி திரிந்து வந்தார். தற்போது டோனி அவரை கைகழுவி'விட்டு புதிய காதலி யுடன் சுற்றி திரிகிறார்.

டோனியின் புதிய காதலி நடிகை கங் கானா ரனாவத். விளம்பர சூட்டிங்கில் நடித்த போது அவருடன் டோனிக்கு பழக்கம் ஏற்பட் டது. கங்கானாவின் அழகில் அவர் மயங்கி விட்டார். இருவரும் ஒன்றாக மும்பை யில் சுற்றி திரிந்தனர். இந்திய வீரர்கள் பயிற்சி யில் ஈடுபட்டபோது அவர் டோனியை பார்க்க வந்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட் டியை பார்க்க கங்கானாவுக்கு, டோனி அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் சூட்டிங் காரணமாக அவரால் போட்டியை பார்க்கமுடியவில்லை. யுவராஜ் சிங்குடன் தீபிகா சுற்றி திரிந்ததால் டோனி அவரை கைகழுவிட்டு புதிய காதலியை



நாடி விட்டதாக பாலிவூட் வட்டராத்தில் பேசப் படுகிறது. (அ–5)




ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அண்மையில் டெஸ்ட் கிரிக்கெற்றில் 709 விக்கெற்றுக் களை வீழ்த்தி உலக சாதனை படைத்த முத்தையா முரளிதரனுக்கு பரிசாக வழங்கிய கார்...

# இடதுகை துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கம் இந்தியா 3ஆவது டெஸ்டில் வலுவான நிலையில்

## கங்குலி இட்டைச்சதம்; யுவராஜ், பதான் சதம்

(பெங்களூர்)

கங்குலியின் சிறப்பான இரட்டைச்சதத்து டன் இந்திய அணி பாகிஸ்தானுடனான 3



ஆவதும் இறுதியுமான டெஸ்டில் வலுவான நிலையிலுள்ளது. இந்தியாவுக்கு சுற்றுப்பய ணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளை யாடி வருகின்றது.

இதில் முதல் இரண்டு போட்டியில் முதலா வது போட்டி இந்தியா வெற்றிபெற்றதுடன் இரண்டாவது போட்டி சமநிலையில் முடிப டைந் தது. இந்நிலையில் மூன்றாவதும் இறு தியுமான போட்டி நேற்று முன்தினம் பெங்க ளூரில் நடைபெற்று வருகின்றது. இப் போட்



டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் அனில் கும்ளே முதலில் துடுப்பெடுத்தாட தீர் மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய இந்திய அணி ஆரம்பத்தில் பாகிஸ் தான் அணியின் டெஸ்ட் அறிமுக வீரர் அர பாத்தின் துல்லியமான பந்தில் காம்பீர் (5), ஜபார் (17) டிராவிட் 19, லக்ஸ்மன் (5) ஓட்டங் களுடன் ஆட்டமிழக்க 61 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களையிழந்து தடுமாறியது.

5ஆவது விக்கெற்றாக ஜோடி சேர்ந்த கங் குலி மற்றும் யுவராஜ் சிறப்பான இணைப் பாட்டமாக 300 ஓட்டங்களைப்பெற சரிவிலி ருந்து நிமிர்ந்தது.

அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய யுவராஜ் 28 பொண்டரிகள் 1சிக்ஸருடன் 169 ஓட்டங் களை பெற்று ஆட்டமிழந்தார். தொடர்ந்து நேற் றைய இரண்டாம் ஆட்டத்தில் கங்குலியுடன் இணைந்து துடுப்பெடுத்தாடிய தினேஷ் கார்த் திக் 24 ஓட்டங்களுடன் ஆட்மிழந்தார்.

தொடர்ந்து 7ஆவது விக்கெற்றுக்காக கங்குலியுடன் ஜோடி சேர்ந்த பதான் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். மறுமுனையில் தனது 99ஆவது டெஸ்டில் முதலாவது இரட்டைச் சதத் தைக் கடந்தார். கங்குலியும் பதானும் இணைந்து 178 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற நிலையில் கங்குலி 239 (30 பௌண்டரி, 2 சிக்ஸர்) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து தனது வழமையான அதிரடி யில் துடுப்பெடுத்தாடிய இர்பான் பதான் டெஸ் டில் முதலாவது சதத்தை பூர்த்தி செய்தார். பதான் 102 (10 பௌண்டரி, 4 சிக்ஷர்) ஓட்டங் களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 626 ஓட்டங்க ளுக்கு சகல விக்கெற்றுக் களையுமிழந்தது.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக தனது அறிமுக டெஸ்ட் போட்டியிலேயே ஜசீர்



அரபாத் 5 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். மற்றும் முகமெட் சமி 2 விக்கெற்றுக்களையும் கனேரியா 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தி னர். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடி வில் ஒருவிக்கெற்றை மாத்திரமிழந்து 86 ஓட்டங்களை பெற்றது. இதில் ஆட்டமிழக்கா மல் சல்மான் பட் 50 ஓட்டங்களைப் பெற்றுள் ளார் .இன்று போட்டிகளின் மூன்றாவது நாள் ஆட்டம். (5)

# மனித உரிமைகளை வென்றெடுப்போம்

மனிதன் என்ற பெயரோடு இப்பூமியிலே பிறக்கும் ஒவ்வொரு உயிரும் பெறுமதி வாய்ந்ததாகும். பிறக்கும் போது மனிதர்கள் யாவரும் சுதந்திரமாகவும், சமமானமதிப்புடனும், உரிமைகளுடனும் பிறக்கின்றனர். ஒருவனுக்கு சமூகத்தில் என்னென்ன உரிமைகள் உண்டோ அதை அவன்பெறுவதற்கு எந்தவொரு தடையும் இருத்தல் சட்டப்படி குற்றமாகும். சட்டத்தின் முன் யாவரும் சமமானவர்களே. பாரபட்சம் எதுவுமின்றிச் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் அவர்கள் உரித்துடையவர்கள். சட்டம், இனம், நிறம், பால், மொழி, மதம், பிறப்பு போன்றவற்றின் அடிப்படையில் வேறுபாட்டிற்குள்ளாக்குவது தடைசெய்யப்பட்டு அனைவருக்கும் சமமான பயனளிக்கக் கூடிய வகையில் உரிமைகள் உறுதி செய்யப்படுகின்றது. மனித உரிமைகள் எவையென வரையறை செய்யவும், அவ்வுரிமைகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கவுமென ஐக்கிய நாடுகளினால் சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட விடயங்களில் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனமும் ஒன்றாகும். இந்த மனித உரிமைகள் பிரகடனமானது ஒழுக்க அதிகாரத்துடன் கூடிய ஒரு விஞ்ஞாபனமாகும்.

### பாதுகாப்பாக வாழும் உரிமை

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் சமூகத்தில் பல உரிமைகளும், கடமைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று சமூகத்தில் எல்லோருக்கும் எல்லாவிதமான உரிமைகளும் கிடைப்பதில்லை. இன, மத, குல பேதங்களின் அடிப்படையில் மனிதன் தன் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்குப் போராடவேண்டியவனாக உள்ளான். மனிதனது அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்குக் கூட மனிதனது போராட்டம் தொடர்கின்ற நிலையைக் காண முடிகின்றது.

மனிதர்கள் யாவரும் வாழ்வதற்கும், சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்கும் உரித்துடையவர்கள் என்று மனித உரிமைகள் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற நிலை இன்று மாற்றமடைந்து இன்று மனிதர்கள் வாழ்க்கையை எவ்வித நோக்கமுமின்றி இறப்பு ஒன்றுதான் நிச்சயம் என்ற கருத்தை உணர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

## இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்

மனிதப் பேரவலங்கள் மண்ணிலே தொடர்ந்து கொண்டிப்பதனால் மனிதர்கள் தம் வாழ்க்கையை இன்பமாக வாழமுடியாது அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மனிதனுக்கு உயிர் வாழும் உரிமை, பாதுகாப்பு பெறும் உரிமை, சுதந்திரம் பெறும் உரிமை போன்றவைகள் இருக்கின்ற போதிலும் இவ்வுரிமைகளைப் பெறுவதற்காக மனிதன் இன்றுவரை போராடி வருகின்றான்.

### சட்டத்தின் முன் சகலரும் சமன்

மனிதசமூகம் அடிமைத்தனத்தில் இருந்து விடுபடுவதற்காகக் காலங்காலமாக பலவிதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததை வரலாறு தந்த பாடங்களினூடாக அறியமுடிந்தது. எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது கொடூரமான சித்திரவதைகளுக்கோ அல்லது இழிவாக நடத்தப்படுதலோ, அல்லது தண்டனை வழங்குதலோ ஒரு மனிதனது உரிமையைப் பறிக்கும் செயல்களாகும். ஏனெனில் மனிதர்கள் யாவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றிச் சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பிற்கு உரித்துடையவர்கள். இத்தகைய உரிமைகளையெல்லாம் அனுபவிப்பதற்கு இன்று மனிதன் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறான்.

### சுதந்திரம்

மனிதர்கள் கருத்துச் சுதந்திரம்,பேச்சுச் சுதந்திரத்திற்கு உரித்தானவர்கள், சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச்சுதந்திரம் என்பவற்றிற்கும் அவர்கள் பங்காளிகளேயாவர். ஒரு நாட்டின் எல்லைக் குள் சுதந்திரமாகப் பிரயாணம் செய்யவும், வாழ்வதற்கும் உரிமை உண்டு. தனது நாட்டை விட்டுச் செல்லவும் மீண்டும் தமது நாட்டுக்குத் திரும்பி வருவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. ஒரு தொழிலைச் செய்வதற்கும், சமமான சம்பளம் பெறுவதற்கும், தொழில் நிமித்தம் இன்னொரு இடத்திற்குச் சென்று வாழ்வதற்கும் மனிதன் உரிமையுள்ளவன்.

### கல்வி பெறும் உரிமை

மனிதன் ஒரு சமூக விலங்கு என்று கருதப்படுகின்றான். சமுதாயத்தில் அவன் ஓர் உறுப்பினன். ஓர் குடிமகன், உற்பத்தியாளன், ஓர் குடும்ப அங்கத்தவன் என்று பல வேடங்களைத் தாங்கும் மனிதன் சமூதாயத்தில் ஓர் உறுப்பினன் என்ற வகையில் சமூகப் பாதுகாப்பிற்கு உரியவனாகின்றான். சமூகத்தின் வளர்ச்சியில் அவனுக்கு கணிசமான பங்குண்டு. தனிமனிதன் மூலம் சமூகமும், சமூகத்தின் மூலம் தனிமனிதனும் வளர்ச்சியடைகின்றன எனலாம்.

சமூக வளர்ச்சி என்னும்போது தனிமனிதன் ஒருவன் பெறும் கல்வியின் மூலம் ஏற்படும் வளர்ச்சி முக்கிய இடத்தை வகிக்கின்றது. கல்வி பெறுதல் என்பது மனிதனின் அடிப்படை உரிமையாகும். அடிப்படைக் கல்வியை இலவசமாகக் கட்டாயமாக அவன் பெறுவதற்கு உரித்துடையவன். தன் குழந்தைக்குத் தேவையான கல்வி முறை, தன்மை போன்றவற்றைத் தெரிந்தெடுக்கும் உரிமை பெற்றோருக்குண்டு. இதேபோன்று ஒரு மாணவன் தனக்குத் தேவையான கல்வியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் அவனுக்குண்டு.

### பெண் உரிமை


இதேபோன்று குடும்பத்தில் பெண்களும் ஆண்களுக்குச் சமமான வாழ்க்கை வாழும் உரிமை உண்டு. எக்காரணம் கொண்டும் ஆண்களுக்கு வழங்கப்படும் அதேயளவு சலுகைகளும், உரிமைகளும் பெண் என்ற காரணத்தால் ஒருவருக்கு வழங்கத் தடை இருத்தல் கூடாது.

தொழில், கல்வி, சமூக அந்தஸ்து போன்ற சகல விடயங்களிலும் பெண்களுக்கு எல்லா விதமான உரிமைகளும் உண்டு. பெண் என்ற காரணத்தினால் எந்தவொரு வாழ்வியல் முறைகளிலும் அவள் பின்தள்ளி வைக்கப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**நா.இராசநாயகம்**
**கணக்காளர்**

இவ்வகையில் இன்று மனிதர்களுக்கும் சமூகத்தில் பலவிதமான கடமைகளும், உரிமைகளும் வரையறை செய்யப்பட்டுள்ளன. இதனால் மனிதர்கள் முதலில் சமூகத்தில் தனக்கு உரிமைகள் உண்டு என்பதை உணர வேண்டும். அந்த உரிமைகள் எங்கெங்கு உண்டு என்பதை அறிய முன்வருவதோடு இவ்வுரிமைகள் எல்லாம் தனக்குச் சமூகத்தில் கிடைக்கின்றதா என உறுதிப்படுத்த வேண்டும். மனிதன் தன் உரிமைகளைப் பெற்று வாழ்கின்ற போது வாழ்க்கை அர்த்தமுள்ளதாகின்றது.

# தேவைப்பட்டால் 'ஆள்தூக்கி சட்டம்' மலேசியப் பிரதமர் படாவி மிரட்டல்



(கோலாலம்பூர்)

மலேசியாவில் வசித்து வரும் இந்திய வம்சாவளியினரின் செயல்கள், தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்தால், 'ஆள் தூக்கி சட்டம் அமுல் படுத்தப்படும் என அந்நாட்டு பிரதமர் அப்துல்லா அகமது படாவி மிரட்டல் விடுத்துள்ளார்.

மலேசியாவில் இண்ட்ராப் அமைப்பினரின் அழைப்பின் பேரில் இந்திய வம்சாவளியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மீது பொலிஸார் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டனர். இதுசர்வதேச அளவில் பெரும்சர்ச்சை ஏற்படுத்தியது. இந்தியா உள்ளிட்ட நாடுகள் செயல்களுக்குகண்டனம்தெரிவித்துள்ளதால், மலேசிய அரசு தனது உத்தியை மாற்றிக் கொண்டது. இண்ட்ராப் அமைப்புக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உள்ளது என மலேசியப் பொலிஸ் ஐ.ஜி.மூசா அசன் குற்றம் சாட்டினார். இதன் தொடர்ச்சியாக் பேட்டி அளித்த அமைச்சர் டத்தோ சாமிவேலு, இந்தியாவை சேர்ந்த ஒரு அமைப்பு தான் இந்தப் போராட்டத்தின் பின்னணியில் உள்ளது என்று கூறினார்.

இதுபற்றி, மலேசியப் பிரதமர் படாவி கூறியதாவது, இண்ட்ராப் அமைப்பினரின் செற்பாடுகளை கண்காணிக்க வேண்டும் என பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளேன். அவர்களின் செயல்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தால், உள்நாட்டு பாதுகாப்பு சட்டம்(ஆள்தூக்கி சட்டம்) அமுலுக்குக் கொண்டு வரப்படும். பயங்கரவாத அமைப்புகளுடனும், உள்ளூர் ரவுடிகளுடனும் இண்ட்ராப் அமைப்பு பேசி, ஆதரவு திரட்டி வருகிறது என்பதை நான் அறிவேன். இவ்வாறு பிரதமர் படாவி கூறினார்.

ஆள் தூக்கி சட்டப்படி ஒருவர் கைது செய்யப்பட்டால், அவரிடம் விசாரணை ஏதும் செய்யாமல் பல ஆண்டுகளுக்கு சிறையில் தள்ள முடியும். அந்த அளவுக்கு இந்த சட்டம் மிகவும் கொடூரமானது. மலேசிய உள்துறை இலாகா பிரதமர் படாவியிடம் தான் உள் ளது. எனவே அவரது பேட்டி, இந்திய வம்சாவளியினருக்கு விடப்பட்ட மிரட்டலாகவே கருதப்படுகிறது.

பிரதமர் துறையில் மூத்த தலைவராக் இருந்து வரும் முகமது நாஸ்ரி அசீஸ் அளித்த பேட்டி ஸ்டார் என்ற பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

அதில், இலங்கையை சேர்ந்த விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் இந்தியாவை சேர்ந்த ஆர்.எஸ்.எஸ்., அமைப்புடன் இன்ட்ராப் அமைப்புக்கு தொடர்பு உள்ளது. இண்ட்ராப் அமைப்பின் தலைவர்கள் அளித்துவரும் பேட்டிகள் மூலமாகவே இதை அறிந்துகொள்ளலாம். விடுதலைப்புலிகளை சந்திக்கத் தான் அவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். ஐ.நா., அமெரிக்காவும், விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என்று அறிவித்துள் ளன. அந்த அமைப்புடன் இண்ட்ராபுக்கு தொடர்பு இருந்தால், அந்த அமைப் பும் பயங்கரவாதஅமைப்புதான்' எனக்கூறியுள்ளார். ஆர்.எஸ்.எஸ்., அமைப்புடன் இண்ட்ராப்புக்கு உள்ள தொடர்பு குறித்து நாஸ்ரி அசீஸ் அதற்கு மேல் ஏதும் கூறவில்லை.

இதை இண்ட்ராப் தலைவர் உதயகுமார் கடுமையாகக் கண்டித்துள்ளார். விடுதலைப் புலிகளுடன் தங்களுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டிய மலேசியப் பிரதமர் மற்றும் உயர் அதிகாரிகள் மீது உதயகுமார் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். தனக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேசமயம் அமைச்சர் டத்தோ சாமிவேலுக்கு வர்த்தகநலன்கள் அக்கறை அதிகமாக இருப்பதால், அரசுக்கு ஆதரவாகவும், மற்றவர்கள் உணர்வுக்கு மதிப்பளிக்காமல் செயல்படுகிறார் என்று பாதிக்கப்பட்ட பலரும் கூறினர். (அ-5)

## கெட்ட வார்த்தை பேசிய மைனா கூண்டில் அடைத்து தண்டனை

(சீனா)

பூங்காவில் வைக்கப்பட்டிருந் மைனா அங்கு வந்தவரை கெட்டவார்த்தை சொல்லி திட்டியதால், கூண்டில் அடைத்து அதற்கு தண்டனை தரப்பட்டது. சீனா சாங்ஷா நகரில் யூலிஷன் பூங்கா உள்ளது.

இங்கு அழகிய மைனா ஒன்று உள்ளது. மீமி என்று இதற்கு பெயர் எட்டு வயதான இது, நன்றாகப் பேசும் திறன் கொண்டது. பூங்காவுக்கு சுற்றுலா வந்த ஒருவரை 'அசிங்கமானவன், முட்டாள்' என்றுதிட்டிவிட்டது கோபமடைந்தஅவர் மைனாதன்னை இழிவான வார்த்தை பேசி திட்டி அவமானப்படுத்தி விட்டதுஎன்று பூங்கா அதிகாரியிடம் புகார் கூறினார். பூங்கா அதிகாரி, மைனாவை 15 நாள் கூண்டில் அடைத்து தண்டனை கொடுக்க உத்தரவிட் டார். கூண்டில் இருக்கும் வரை அதன் உடல் நிலையைக் கண்காணிக்கவும் உத்தரவு போட்டுள்ளார். எல்லாம் சரிதான். மைனாவுக்கு கெட்ட வார்த்தை சொல்லிக் கொடுத்தது யார் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. (அ-5)

## உலக தரிசனம்

## சர்க்கரை சாப்பிட்டால் மூளை பாதிக்கும்

(நியூயோர்க்)

அதிக அளவு சர்க்கரை சாப்பிடுவது மூளையை பாதிக்கும் என்று ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. அதிக அளவு சர்க்கரை பயன்படுத்துவதால் நீரிழிவு நோய் ஏற்பட்டு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

ஆனால் அதிக சர்க்கரை, இனிப்பு கலந்த குளிர்பானங்களை அதிகம் உட்கொள்பவர்களுக்குபிற்காலத்தில் மூளை பாதிக்கும் அபாயம் உள்ளது என்று டாக்டர்கள் ஆய்வில் தெரிய வந்துள்ளது. அமெரிக்காவின் கலபாமா மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழக டாக்டர்கள் எலிகளுக்கு அதிக இனிப்பு கலந்த குளிர்பாணங்கள், இனிப்பு வகைகளை கொடுத்து ஆய்வு நடத்தினர். சில எலிகளுக்கு சாதாரண தண்ணீரைக் கொடுத்தனர்.

அதிக இனிப்பைப் பயன்படுத்திய எலிகளுக்கு 'அல்சிமர்' என்ற மூளை பாதிப்பு, நரம்பு தளர்ச்சி ஏற்பட்டது தெரிய வந்தது. மனிதர்களுக்கும் இதே நிலை பிற்காலத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று அந்த டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். (அ-5)

## சீனாவில் விவாகரத்து அதிகரிப்பு

(பீஜிங்)

கணவன்-மனைவி உறவின் அவசியம் பற்றிய புரிதல் இன்மையால் சீனாவில் விவாகரத்து அதிகரித்து வருகிறது. திருமணமாகாமல் சேர்ந்து வாழும் மனநிலை பெருகி வருவதால் தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சீனாவின் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வீட்டுக்கு ஒரு குழந்தை என்ற சட்டம் இருந்து வருகிறது. இதனால், குழந்தைகளை மிகவும் செல்லமாக வளர்க்கின்றனர். ஒரே குழந்தைக்கு தேவையான அனைத்தையும் வாங்கித் தருவது, பல விஷயங்களைச் சொல்லிக்கொடுப்பது போன்றவற்றில் சீனர்கள் முன்னிலையில் உள்ளனர். எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்தாலும், குழந்தைக்கு கணவன்-மனைவி உறவின் அவசியம் பற்றி சொல்லிக் கொடுப்பதில்லை. இதனால் திருமணமான சில நாட்களிலேயே விவாகரத்து கேட்டு நீதி மன்ற வாசல்கதவை தட்டும் இளம் தம்பதிகள் அதிகரித்து வருகின்றனர். புதிதாக திருமணமான தம்பதிகள் எதிர்மறையாக பேசுவதும் அதிகரித்து வருகிறது. திருமண உறவின் அவசியத்தை உணராமல், இதுபோன்ற வளரும் குழந்தைகள், எதையும் பணம் கொடுத்து வாங்கிவிடலாம் என்று நினைக்கின்றனர். பணம் அதிகமாக இருப்பதால் விவாகரத்து செய்ய தயங்குவதும் இல்லை. இதுகுறித்து 55 வயதான கைரிசூ கூறுகையில், 'சீனாவில் திருமணத்திற்கு முன் பெண்ணின் விரலைக் கூட ஆண்கள் தொடமாட்டார்கள். திருமணத்துக்கு முன், உடலுறவு வைத்துக் கொள்ளும் அரசு ஊழியர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். மாணவராக இருந்தால் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப்பட்டார். இது எல்லாம் அந்தக் காலத்தில் நடந்தது. இன்று இளைஞர்களிடையே உறவில் பெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. திருமணமாகாமல் சேர்ந்து வாழ்வதும், உடலுறவு வைத்துக்கொள்வதும் அதிகரித்துள்ளது இதுதான் திருமணஉறவில் முறிவை ஏற்படுத்துகிறது' என்றார். (அ-5)


## எங்க அப்பா எப்போது வருவார்?




பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இராணுவ ஆட்சியாளர்களால் சிறை பிடிக்கப்பட்ட தங்களின் தந்தை எப்போது வருவார் என்ற பதாகை ஏந்தி அதிபர் மாளிகை நோக்கி பேரணி சென்ற சிறுவர், சிறுமிகள், இராணுவ ஆட்சியாளர்களின் அராஜகத் தால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமிகளின் பேரணி சனிக்கிழமை நடைபெற்றது.

# அரசின் வரவு- செலவுத் திட்ட 3ஆவது வாசிப்பு பெரும்பான்மைப்பலம் சிறுபான்மைக் கட்சிகளிடம்







மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் வரவு -செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பெரும்பான்மை பலமானது சிறுபான்மை கட்சிகளிடம் உள்ளது.

மஹிந்தவை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மைக் கட்சிகள் ஆதரிக்கின்றன.

முஸ்லிம் மக்களினது கோரிக்கைகளை மஹிந்த அரசாங்கம் நிராகரித்து வருவதால் வரவு-செலவுத் திட்டம் மீது அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண மசூதிகளின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அனைத்துக்கட்சி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதத்தையும் அனுப்பியுள்ளது. முஸ்லிம்களின் நிலங்கள் ஆக்கிரமிப்பு விவகாரம்,மசூதிகளின் ஒலிபெருக்கிகளுக்கான கட்டுப்பாடு, மௌலவி ஆசிரியர்கள் நியமனம் உள்ளிட்ட பலகோரிக்கைகளை அந்தக் கூட்டமைப்பு முன்வைத்த போதும் எதுவித பதிலும் மஹிந்தவிடமிருந்து கிடைக்கப்பெறாமையினால் இந்த அழைப்பை அக்கூட்டமைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பில் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸின் பொதுச்செயலர் ஹசன்அலிகருத்துத் தெரிவிக்கையில், 1994 ஆம் ஆண்டிலிருந்தே மௌலவி ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அதே போல் போரினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் கிராமங்களில் தங்களது நிலங்களிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு பல்வேறு காரணங்களுக்காக பலவந்தமாக அந்நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதோடு ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.

முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் தொழுகைக்கான அழைப்புகளை தடை செய்வது என்பது சாத்தியமற்றது. இவை தொடர்பில் ஜப்பானிலுள்ள மஹிந்தவுடன் இருக்கும் மூத்த அமைச்சர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை நாங்கள் கவிழ்க்கவில்லை. ஆனால் அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் எமக்கு தேவையாக உள்ளது என்றார். அதேபோல மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் அண்மையில் மஹிந்தவின் ஆலோசகரும் சகோதரருமான பஷில் ராஜபக்ஷவை நேரில் சந்தித்து 14கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்.

மலையகத்தில் பல்கலைக்கழகம் அமைத்தல், மலையக கல்வி அறக்கட்டளை, மலையக மக்களின் கல்வி மேம்பாடு, பல்கலைக் கழகங்களில் உள்ள இந்திய வம்சாவளி மாணவர்களின் தரவுகளை சேகரித்தல், மலையக பிரதேசங்களை இணைத்து மேலதிக பிரதேச செயலகம் அமைத்தல் ஆகிய கோரிக்கைகளை சந்திரசேகரன் முன்வைத்ததாகவும் அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மலையக மக்கள் முன்னணியின் பேச்சாளர் தெரிவித் துள்ளார்.

இதனிடையே பெருந்தொகையான தமிழர்களை மஹிந்த அரசாங்கம் கைது செய்து சிறையிலடைத்ததை எதிர்த்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வழக்குத் தொடர்ந்துள்ள நிலையில் அக் கட்சியின் நிலைப்பாடு விவாதத்திற்குரியதாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## டிசம்பர் முதல் வார காலத்தில் மன்னாரில் 34 ஆயிரம் பேர் இடப்பெயர்வு

(கொழும்பு)

மன்னாரில் இம்மாதம் முதல் வாரகாலப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் 33ஆயிரத்து 964 பேர் இடம்பெயர வேண்டிய நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பகுதி பெரும்பாலும் கத்தோலிக்க மதத்தவரைக் கொண்ட பகுதியாகும்.

அங்கு கடந்த டிசம்பர் 1ஆம் திகதி படையினர் முன் நகர்வை மேற்கொண்டனர். இது மாந்தைக்கு மேற்காக உள்ள பகுதியாகும். 1990களில் இருந்து அது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

முன் நகர்ந்த படையினர் அங்கு கடுமையான எதிர்ப்புக்களைச் சந்தித்தனர். முதல் சுற்று சமர் இரண்டரை மணிநேரம் நீடித்தது. வன்னி மீதான படை நடவடிக்கை தொடங்கிய பின்னர் நடைபெற்ற மிகவும் உக்கிரமான சமர்களில் இதுவும் ஒன்று. இதில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

லெப்.கேணல் ரமேஸ் பெர்னாண்டோ தலைமையில் 8ஆவது சிங்க றெஜிமென்ட், மேஜர் டி.எம். ஜே.பாலசூரிய தலைமையில் 2ஆவது கொமாண்டோ றெஜிமென்ட், லெப்.கேணல் உடித பண்டாரா தலைமையில் 3ஆவது கொமாண்டோ றெஜிமென்ட் ஆகிய படையணிகள் இச்சமரில் பங்கேற்றிருந்தன.

இதனை முதலாவது அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் சவீந்திர சில்வா வழி நடத்தியிருந்தார். அப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மோதல்களில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 24 பேர் காயமடைந்ததாகவும் படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே 57ஆவது படையணி கட்டளைத் தளபதியான பிரிகேடியர் ஜகத் டயஸ், வவுனியாவுக்கு கிழக்காக பெரிய பண்டிவிரிச்சான் பகுதியிலும் ஒரு படை நடவடிக்கையை டிசம்பர் 1ஆம் திகதி மேற்கொண்டிருந்தார். அப்பகுதியும் 1990களின் பிற்பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அந்நடவடிக்கையில் கேணல் யூ.ஆர். அபயரட்ன தலைமையில் 7ஆவது இலகு காலாட் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

இந் நடவடிக்கைகளைத் தொடர்ந்து வவுனியா மாவட்டத்தில் இருந்து 3 ஆயிரத்து71 குடும்பங்களும் (10ஆயிரத்து 302 பேர்), மன்னார் மாவட்டத்தில் இருந்து 6ஆயிரத்து 328 குடும்பங்களும் (23ஆயிரத்து 662பேர்) இடம் பெயர்ந்துள்ளனர்.

இதனிடையே புதிதாக 59ஆவது படையணி அமைக்கப்பட்டுள்ள மணலாறு பகுதியிலும் புதிய படை நடவடிக்கை தொடங்கலாம் எனத் தெரிகின்றது.

மூன்று பிரிகேட்டுக்களைக் கொண்ட இப்படையணிக்கு பிரதி கட்டளைத் தளபதியும் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)




அண்மையில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநர் R.A. திலகரட்ணம் ,உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பங்குத்தந்தை அருள்திரு. ஜெபநேசரட்ணம், கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன், பொறுப்பாசிரியர் அன்ரனிபீற்றர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## தேர்தலுக்கு தயாராகுங்கள் ஜனாதிபதி அறிவுறுத்தல்

பொதுத் தேர்தலுக்கு தயாராகுமாறு அரசு தரப்பினருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். வரவு-செலவுத் திட்ட 3ஆவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் அரசாங்கம் வெற்றி பெறும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. இருந்தாலும் வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அரசாங்க அங்கத்தவர்கள் தேர்தலுக்கு முகங்கொடுக்க தயாராக இருக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு தயாராக இருங்கள் என ஜனாதிபதி அரசாங்க அங்கத்தவர்களுக்கு தெரிவித்துள்ளமை இதுவே முதற்தடவையாகும்.

14ஆம்திகதி நாங்கள் வெல்வோம். நவம்பர் 19ஆம் திகதி பெற்றதை விட கூடுதலான வாக்குகள் எங்களுக்கு கிடைக்கும். நாங்கள் தேர்தலுக்கு முகம்கொடுக்க பயப்படுகிறோம் என்ற ஒரு கதை நாட்டில் உலவுகிறது. சந்தர்ப்பவசத்தால் 14 ஆம் திகதி நாங்கள் தோற்றால் நாங்கள் தேர்தலுக்கு செல்ல வேண்டி ஏற்படும். நாங்கள் வெல்வதற்கு இன்றைய சூழ் நிலை உகந்ததாக இருக்கின்றது. தேர்தல் நடக்காதென நினைக்க வேண்டாம். ஆகவே வெல்வோம் என்ற முனைப்போடு செயற்படுங்கள் என்று ஜனாதிபதி தெரிவித்தார். (அ-5)

## இலவச கணனிக் கற்கைநெறி

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறுப்பிட்டி வடக்கில் அமைந்துள்ள சிற்றி இன்பமற்றிக் சென்ரர் நிறுவனத்தினர் மாணவர்களின் எதிர்கால நலன் கருதியும் அவர்களை இலத்திரனியல் உலகுக்கு இட்டுச் செல்லவும் இலவச கணனிக் கற்கை நெறிகளை வழங்கி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக அடுத்த பிரிவு ஆரம்பிக்கத் தீர்மானித்ததற்கமைவாக, இக் கற்கை நெறிக்கு அடுத்த கட்டமாகவும் 50 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 16ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். இத் திகதிக்குப் பின்னர் வரும் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை சிற்றி இன்பமற்றிக் சென்ரர் நிறுவனத்தின் சிறுப்பிட்டிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேலதிக விபரங்களுக்கு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி இல. 060 2213411, 021 4591765 (து)

## தொலைக்காட்சிப்பெட்டி திருட்டு

பருத்தித்துறை மாதனையில் வீடொன்றிலிருந்து இரவு வேளை தொலைக்காட்சிப் பெட்டி திருடப்பட்டுள்ளது. குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தொலைக்காட்சிப் பெட்டி திருடப்பட்ட வீட்டிலிருந்து அடையாள அட்டை ஒன்றை மீட்டுள்ளனர். (அ-52)

## இலங்கை வங்கி பரு.கிளை கணனிமயமாகிறது

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை இம்மாத நடுப்பகுதியில் கணனிமயப்படுத்தப்படவுள்ளதாக கிளையின் முகாமையாளர் க.ப. ஆனந்தநடேசன் தெரிவித்தார்.

பருத்தித்துறை மக்களின் வங்கித் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பெரும் பங்காற்றும் இலங்கை வங்கி, மக்கள் இலகுவான வங்கிச் சேவையை பெற்றுக்கொள்ள தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-52)

## நல்லூர் பிரதேச செயலகம் ஓய்வூதியர்களுக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்களுக்கு அவர்களுக்கான ஓய்வூதியம், நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வங்கியூடாக வழங்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டிசம்பர் மாத ஓய்வூதியப் பற்றுச்சீட்டுடன் இணைத்து, நல்லூர் பிரதேச செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள "உயிர் வாழ்வுச் சான்றிதழ்" படிவத்திலேயே இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சனி, ஞாயிறு இரு தினங்களும் பலர் தொலைபேசி மூலம் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். (அ-5)

## வைத்தியசாலைகளை கணனிமயப்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள வைத்தியசாலைகளை கணனிமயப்படுத்த சுகாதார மற்றும் போஷாக்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வைத்தியசாலையில் நோயாளர் உட்பட நோய் தொடர்பான நடவடிக்கைகளை கொண்டு நடத்துவதில் கிரமமான நடவடிக்கை முறைமையொன்று இதுவரை வெளியிடப்படவில்லை என்று அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தேவைப்படும் மருத்துவ அறிக்கைகள் மற்றும் அது தொடர்பான சான்றிதழ்களை தேடி எடுக்கவேண்டிய சிக்கல் உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வைத்தியசாலைகளை கணனிமயப்படுத்தி நோயாளர் தொடர்பான தகவல்கள் மற்றும் அவர்களுக்கான சிகிச்சைகள் குறித்த தகவல்களை வெளியிட்டும் அவற்றை நடைமுறையில்கொண்டு செல்லவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (அ-7)

பொறுமையை எங்கு கைவிடுகிறோமோ– அங்கு பலாத்காரம் உருவெடுக்கிறது.
– குமேனியா

வலம்புரி

# தவறான கணிப்பில் அரசு நடத்தும் யுத்தம்

இன்னும் இரண்டு மூன்று அடிகள் விழுந்தால் தான் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கருத்துத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றும்போது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறிய மேற்படி கருத்து அரசின் தவறான கணிப்பை கோடிகாட்டியுள்ளது.

விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம் அந்த அமைப்பை பலமிழக்கச் செய்ய முடியும் என அரசு நினைக்கிறது. அந்த நினைப்பை மையமாக வைத்துக்கொண்டே நவீன ரக ஆயுதங்களையும், யுத்தக்கப்பல்களையும் அரசு கொள்வனவு செய்து வருகின்றது. இதற்கு மேலாக நவீன ராடர் கருவிகளை படைத்தளங்கள் மீது பொருத்தியுள்ளதுடன் இந்தியாவை உசார் படுத்தி இந்தியக் கடலோரத்திலும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய யுத்தக் கப்பல்களிலும் நவீன ராடர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்விதம் ஆயுதக் கொள்வனவையும், நவீன யுத்த தளபாடங்களைப் பொருத்துவதிலும் இலங்கை அரசு மேற்கொள்ளும் செலவீனம் கோடிக்கணக்கான ரூபாய்களாகும் இவ்விதம் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிடுவதால் விடுதலைப்புலிகளை நலிவடையச் செய்து விடலாம் என அரசு கருதுமாயின் அது மாபெரும் தவறாகும்.

ஏனெனில் அரசின் பாதுகாப்பு செலவீனத்தில் பெரும் பகுதி படைத்தளங்களையும், நாட்டின் கேந்திர மையங்களையும் பாதுகாப்பதற்கானவையாகும்.

அதாவது, நாடாளுமன்றத்தையும் கட்டுநாயக்க விமானத் தளத்தையும் பாதுகாப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை எடுத்து ஆராய்ந்தால் மொத்தப் பாதுகாப்பு செலவீனத்தில் பெரும் பகுதி நாட்டின் கேந்திர நிலையங்களை பாதுகாப்பதற்காக பயன்படுகின்றது.

இந்நடவடிக்கை ஒருபோதும் விடுதலைப் புலிகளை பலமிழக்கச் செய்யாது. மாறாக விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு வரவழைக்க இன்னும் இரண்டு மூன்று அடிகள் விழவேண்டும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறுவது தவறான கருத்தும் நாட்டை நாசமாக்கும் சிந்தனையுமாகும்.

ஏனெனில் வன்னியில் இடம்பெறும் விமானக் குண்டுத்தாக்குதலில் தொண்ணூற்றொன்பது வீதமானவை பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது இடம்பெறுகின்றன.

எனவே பொதுமக்களைத் தாக்கும் நடவடிக்கையை, நடத்திக்கொண்டு எதிர்வு கூறல்களை மேற்கொள்வது பொருத்தமானதல்ல என்பதால் அரசு சமாதான வழிகளை பின்பற்ற முன்வருவதே புத்திசாலித்தனமும் நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கான வழியுமாகும்.

# சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகளுக்கு ஊடகங்களில் போதியளவு இடம் வழங்கப்படவில்லை

## பெரும்பாலான சிவில் சமூகத்தினர் தெரிவிப்பு

சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகள் தொடர்பாக ஊடகங்களில் போதியளவு இடம்வழக்கப்படவில்லையென கருத்துக்கணிப்பொன்றில் பெரும்பாலான சிவில் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். இலங்கையில் மனிதஉரிமைகள் மற்றும் சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பான செய்தியறிக்கை குறித்து ஊடகவியலாளர்கள், சிவில் சமூகத் தினரிடையே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனமும் (ஐ.எவ்.ஜே.) இணைந்து நடத்திய கருத்துக்கணிப்பிலேயே 97.4 சதவீதமான சிவில் சமூகத்தினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

சிங்கள அச்சு ஊடகங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களே இக்கருத்துக்கணிப்பில் பங்குபற்றியவர்களில் பெரும்பாலானோராவர். இதில் பங்குபற்றிய சிவில் சமூகத்தினர் சிறுவர், பெண்களின் உரிமைகள், சமாதான முயற்சி கள் தொடர்பான விடையங்களில் ஈடுபட்டுள்ள உள்ளூர் நிறுவனங்களைச் சேர்ந்தோர்ஆவர்.

இந்தக் கருத்துக்கணிப்பில் பங்கேற்றவர்களில் 71.25 சதவீதமானோர் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், விதிகள் என்பன தொடர்பாக போதிய விழிப்புணர்ச்சியின்மை மனித உரிமைகள் தொடர்பாக புரிந்துகொள்வதிலும் அறிக்கையிடுவதிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக கூறியுள்ளார். 15 சதவீதமானோர் சிறுபான்மைக் குழுக்களின் வித்தியாசங்கள் பற்றி போதிய அறிவின்மை தமக்குத் தடங்கலாக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

10 சதவீதமானோர் இலங்கையில் தற்போதைய பிரச்சினையின் அடிப்படைக் காரணங்கள் பற்றிய தெளிவின்மையைக் காரணமாக கூறியுள்ளனர். 2007 மே.ஜூன் மாதங்களில் 22 சிங்கள, ஆங்கில, தமிழ்மொழிப் பத்திரிகைகள் மற்றும் 4 பிரதான தொலைக்காட்சிகளின் பிரதான செய்தியறிக்கை என்பவற்றை ஆராய்ந்த போது அச்சு ஊட கங்களில் 4 சதவீதமானவை மட்டுமே சிறுவர்கள், பெண்கள் சிறுபான்மையினர் தொடர்பானவையாக இருந்தன.

தொலைக்காட்சிகளில் இது 10 சதவீதமாக இருந்தது. கருத்துக்கணிப்பில் பங்குபற்றியவர்களில் அரைப்பங்கிற்கு அதிகமானோர் சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாட்டை இலங்கையின் மிக அழுத்தமான மனிதஉரிமைப் பிரச்சினையாக இனங்கண்டனர். சிவில் சமூகத்தைச் சேர்ந்த 71.8 சதவீதமானோரும் ஊடகவியலாளர்களில் 46.4 சதவீதமானோரும் இப்பிரச்சினை குறித்து போதியளவில் அறிக்கையிடப்படவில்லையென தெரிவித்தனர்.

89.5 சதவீதமான சிவில் சமூகத்தினரும் 80.2 சதவீதமான ஊடகவியலாளர்களும் இவ்விடயங்கள் அடிக்கடி தவறாது அறிக்கையிடப்படுவதாக கருத்துத் தெரிவித்தன. மேலும் 97.7 சதவிதமான சிவில் சமூக்த்தினர் சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகள் தொடர்பாக ஊடகங்களில் போதியளவு இடம் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்தனர்.

ஊடகவியலாளர்களில் 38.9 சதவீதமானோர் இக்கருத்தைத் தெரிவித்தனர். சாதகமற்ற மற்றும் சிறுபான்மை சமூகங்கள் தொடர்பாக சரியான, பாரபட்சமற்ற செய்திகளை வெளியிடுவதற்கு அரசாங்கத்தின் உத்தியோக பூர்வமற்ற தனிக்கை அடிப்படைத்தடங்கலாக உள்ளதாக 64.4 ஊடகவியலாளர்களும் 58.8 சிவில் சமூகத்தினரும் தெரிவித்தனர்.

சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாட்டுக்கு அடுத்ததாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமீறல் தமது கவலைக்குரிய அடுத்த விடயமாக உள்ளதென 13.2 சதவீதமான சிவில் சமூகத்தினர் கூறினர். 7.5 சதவீதமான ஊடகவியலாளர்கள் சித்திரவதைக் குற்றச்சாட்டுக்கள் உள்ளக இடப்பெயர்வுக்குள்ளானோர் ஆகிய விடயங்களைக் கூறிப்பிட்டனர்.

சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாட்டுக்கு அடுத்ததாக குறைந்தளவு செய்தியறிக்கை இடப்பட்ட விடயமாக 10.3 சதவீதமான சிவில் சமூகத்தினர் பாலின பாகுபாட்டினையும் ஊடகவியலாளர்களின் 14.4 சதவீதமானோர் சித்திரவதையையும் குறிப்பிட்டனர். பெண்கள், சிறுவர்கள் உட்பட சாதகமற்ற குழுக்கள் சிறுபான்மையினர் தொடர்பான செய்திகள் ஊடகங் களில் மிக மிக குறைவாக இருப்பதாக 97.4 சதவீதமான சிவில் சமூகத்தினர் தெரிவித்தனர்.

எனினும் 72.5 சதவீதமான ஊடகவியலாளர்கள் தமது நிறுவனங்கள் பல்வகையான குழுக்கள் சிறுபான்மையினருக்கு அவர்களின் கருத்து ஊடகங்களில் தெரிவிக்க வாய்ப்பளிப்பதாக கருத்துத்தெரிவித்தனர். எனினும் சாதகமற்ற குழுக்கள் மற்றும் சிறுபான்மையினர் தொடர்பான செய்திகள் உணர்ச்சிமயமானதாகவும் (76.9 %) ஒரே மாதிரியானவையாகவும் (64.4%) இருப்பதாகவும் பெரும்பாலான ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஜனநாயகத்திற்கான ஐரோப்பிய முதற் பணி அமைப்பு ஆகியனவற்றில் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பாரிய செயல்திட்டம் ஒன்றின் ஒரு அங்கமாக இக் கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.(அ–5)

# தென்பகுதி தாக்குதல்கள் ஒரு 'பதில் நடவடிக்கையே'

## 'லக்பிம' ஆங்கில வார ஏடு தகவல்

வன்னிப் பிரதேசத்தில் இராணுவம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் ஆழ ஊடுருவும் படையினரின் தாக்குதல்களுக்கான பதில் நடவடிக்கையாகவே தமிழீழ விடுதலைப்புலிகளின் குழுக்கள் தென்னிலங்கையில் ஊடுருவி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன என்று 'லக்பிம' வார ஏட்டின் ஆங்கிலப் பதிப்பு தெரிவித்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் போர் நிறுத்த காலத்திற்கு முன்னைய காலத்திற்குச் சென்றுவிட்டனர். தற்போது நடைபெற்ற தாக்குதல்களை நோக்கும் போது அரச படையினருடன் முழு அளவிலான போருக்கு செல்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு எந்த தடையும் இல்லை என்பதை காட்டுகின்றது. கொழும்பில் இரு குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்று ஒருவாரம் கடந்த நிலையில் அனுராதபுரம்–ஜனக புர பாதையில் சென்ற பேருந்து குண்டுத்தாக்குதலில் சிக்கியுள்ளது. இதில் 16பேர் கொல்லப்பட்டதுடன், 22பேர் காயமடைந்தனர்.

கடந்த ஆண்டு அப்பகுதியில் நடைபெற்ற குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து 300 ஊர்காவல் படையினர் திரட்டப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டிருந்தனர். ஆனால் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தாக்குதலின் போது கிளைமோர் குண்டு ஊர் காவல் படையினரின் பதுங்கு குழியில் இருந்து 50 மீற்றர் தொலைவிலேயே பொருத்தப்பட்டிருந்தது. இந்த பதுங்கு குழிகள் கடந்த ஆண்டு நடைபெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலை தொடர்ந்து அமைக்கப்பட்டிருந்தன.

மேலும் அந்தப் பாதையினால் வீதி துப்பரவுப் பணியில் ஈடுபடும் படையினர் சென்ற 30 நிமிடங்களில் கிளைமோர் குண்டுவெடித்துள்ளது. எனினும் கொழும்பில் நடைபெற்ற இரு குண்டுத்தாக்குதலை தொடர்ந்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அரசுக்கு கடும் சேதத்தை உண்டுபண்ணி உள்ளது.

பெருமளவில் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டது இன உறவுகளுக்கு இடையில் உள்ள பெரும் வேறுபாட்டை நிரூபித்துள்ளது. விடுதலைப்புலிகள் அண்மைக்காலத்தில் தெற்கில் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் அரசுக்கு பெரும் கவலைகளை தோற்றுவித்துள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. வன்னியில் நடைபெற்று வரும் படையினரின் நடைவடிக்கைகளுக்கு பதில் நடவடிக்கையாகவே விடுதலைப்புலிகள் தெற்கில் தாக்குதல்களை தொடுத்து வருகின்றனர்.

அம்பாறையின் கஞ்சிகுடிச்சாறு பகுதியில் இருந்து 30 விடுதலைப்புலிகள் யால பகுதி நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கஞ்சிகுடிச்சாறு பகுதியில் 120 விடுதலைப்புலிகள் நிலைகொண்டுள்ளனர். யால பகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் விடுதலைப்புலிகள் தமது கஞ்சிகுடிச்சாறு தளத்துடன் செல்லிடப்பேசியில் தொடர்புகளைப் பேணி வருகின்றனர். அவர்களுக்கான விநியோகங்கள் பதுளை–செல்லக்கதிர்காமம் வீதியான பி–25 வீதியின் ஊடாக வெள்ளை நிற வான் ஒன்றினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனிடையே கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தின் கொமோண்டோப் பிரிவைச் சேர்ந்த 8 பேர் கொண்ட குழுவினர் யால பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளுடன் தெபரதுவா பகுதியில் மோதலில் ஈடுபட்டுள்ளனர். இது யால பகுதியின் உட்புறமாக 30 கி.மீ.தொலைவில் உள்ளது. இம் மோதலில் ஒரு கொமோண்டோ படைத்தரப்பைச் சேர்ந்த ஒரு வர் காயமடைந்துள்ளார். அப்பகுதியில் மாடு மேய்ப்பதற்கு சென்று காணாமல் போன இருவரது எலும்புக்கூடுகள் கடந்த வாரம் மீட்கப்பட்டுள்ளன.

யால பகுதியின் தரையமைப்பைப் பொறுத்த வரையில் அடர்ந்த மரங்களுக்கு இடையில் விடுதலைப்புலிகளை கண்டறிவது கடினமானது. விடுதலைப்புலிகளின் சிறிய குழு ஒன்று வில்பத்து சரணாலயம் பகுதிக்குள்ளும் ஊடுருவியுள்ளதாக படையினரின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. வன்னிப் பகுதியில் நடைபெற்று வரும் படைநடவடிக்கைகள் மற்றும் ஆழ ஊடுருவும் படையினரின் தாக்குதல்களுக்கான பதில் நடவடிக்கையாகவே விடுதலைப் புலிகளின் குழுக்கள் தென்னிலங்கையில் ஊடுருவி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ–5)

# 31ஆம் திகதிக்குள் தீர்வு இன்றேல்

## பணிநிறுத்தம் நிச்சயம்

### ஆசிரியர் சேவைச் சங்கப் பொதுச்செயலாளர்

தேசிய ஆணைக்குழு உறுதியளித்தவாறு, டிசம்பர் 31ஆம் திகதி சம்பள பிரச்சினைக்குத் தீர்வைத் தராவிட்டால் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கப் போவதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பள ஆணைக்குழு முரண்பாடான அறிக்கைகளை விட்டுவருவதால் அதன் மீது நம்பிக்கையில்லை என இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கப் பொதுச் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

ஆனால் அமைச்சரவை உறுதியளித்திருப்பதால் நாங்கள் பொறுமையுடன் காத்திருக்கிறோம். தங்களது கோரிக்கைகள் காலக்கெடுவுக்குள் நிறைவேற்றப்படாவிட்டால் ஆசிரியர்களின் ஐந்து தொழற்சங்கங்களும் நிச்சயமாக பணி நிறுத்தம் செய்யுமென ஜெயசிங்க தெரிவித்தார். (அ–5)

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வாழ்த்து

க.பொ.த சாதாரணதரத்தில் தோற்றும் யாழ்.மாணவர்களை சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தமது இலக்கை அடைய இராணுவம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பலாலி படைத்தலைமையகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு;

யாழ்.குடாநாட்டில் இம்முறையும் க.பொ.த சா/த பரீட்சை ஆரம்பமாவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.10 ஆம் திகதி ஆரம்பமாகின்ற பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது.

இம்முறையும் இப்பரீட்சையை நடத்த தேவையான பரீட்சை வினாத்தாள்களை பாதுகாப்பு படையினர் கொழும்பிலிருந்து விமானம் மூலம் கொண்டுவந்து கையளித்தனர். பரீட்சை நடைபெறும் காலங்களில் மாணவர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்க படையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மாணவர்களின் கல்வி தொடர்பில் எப்போதும் முன்வந்து உதவும் பாதுகாப்புப் படையினர் இக் காலப் பகுதியில் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய சூழலை ஏற்படுத்துவதற்கும் தேவையான போக்குவரத்தை கிரமமாகச் செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன் மாணவர்கள் பரீட்சையில் முழு ஈடுபாட்டுடன் தோற்றுவதற்கான மனநிலையை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மாணவர்கள் சிறப்பாக பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தமது இலக்கை அடைய வேண்டும் என்று இராணுவத்தினராகிய நாம் இறைவனை வேண்டுகின்றோம் என்றுள்ளது. (ச)

# அரசை எவராலும் அசைக்க முடியாது பட்ஜெட்டில் வென்று ஆட்சி தொடரும்

## அமைச்சர் ஜெயராஜ் உரை

ஆளுந்தரப்பிலிருந்து எவர் எதிர்த்தரப்புக்கு மாறினாலும் வரவு செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசாங்கம் வெற்றி பெறுவது உறுதி. அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் அனுமதிக்காது என்று அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினை எவராலும் அசைக்க முடியாது.

வரவு செலவுத்திட்டத்தை வெற்றி கொண்டு எமது ஆட்சியை தொடர்ந்து முன்னெடுப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும்14 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அரசாங்கத்திடம் சிறுபான்மைக் கட்சிகள் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இதுகுறித்து கேட்ட போதேஅமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது, எமது பக்கம் இருந்து எவர் சென்றாலும் எந்நாட்டின் பிரதமராக ரணில் வருவதற்கு ஜே.வி.பி ஒருபோதும் இடமளிக்காது. அதனை உறுதிபடக்கூறுகின்றேன்.

எனவே எமது அரசாங்கத்தை கவிழ்க்கும் சூழ்ச்சிக்கு ஜே.வி.பி துணைபோகாது. அத்தோடு ஐ.தே.கட்சியின் ஐந்து எம்.பிக்களுடன் தற்போது பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்களில் இருவர் நிச்சயம் வரவு -செலவுத்திட்ட மூன்றாம் நிலை வாசிப்பின்போது ஆளுந்தரப்பில் வந்து அமர்வார்கள். எனவே அரச தரப்பில் உள்ள புத்திகூர்மையுடைய எவரும் எதிர்த்தரப்புக்குப் போகமாட்டார்கள் என்றார். (ச)

## வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக...

அரசு ஈடுபடுவதாகத் தெரிவித்தார்.

கிழக்குப் பகுதியில் முஸ்லிம்களின் நிலங்கள் மட்டுமல்ல, இந்துக் கோவில்களுக்கு உரிமையான இடங்களையும் அரசு இவ்வாறு பெரும்பான்மை மக்களுக்குப் பிரித்துக் கொடுத்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் 14 ஆம் திகதியன்று வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் போது அதற்கு ஆதரவாக வாக்களிப்பதா? அல்லது எதிர்த்து வாக்களிப்பதா? என்பது குறித்து கட்சியின் உயர் மட்டக் குழு கூடி முடிவு செய்யுமெனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கில் முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. அத்துமீறிய குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக பொத்துவில், உல்லை, சம்மாந்துறை போன்ற இடங்களில் ஆண்டாண்டு காலமாக முஸ்லிம்கள் வாழ்ந்த பூர்வீகக் காணிகள் வேறு சக்திகளால் அபகரிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேச முஸ்லிம் மக்களும் காணி தொடர்பான பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர், முஸ்லிம்களின் அதிகமான வாக்குகளைப் பெற்ற கட்சி என்ற வகையில் இது தொடர்பாக நாம் குரல் கொடுத்து வருகின்றோம்.

சில காரணங்களுக்காக 2008 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாக்கெடுப்புக்கு ஆதரவாக வாக்களித்தோம். ஆனால் முஸ்லிம்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. அது தொடர்பாக நாம் தொடர்ந்து முன்வைத்து வரும் கோரிக்கைகளும் கணக்கில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

வரவு-செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நெருங்கிக் கொண்டிருக்கின்ற நிலையிலும் இன்றுவரை முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்காக அரசாங்கம் எந்தவித அழைப்பையும் விடுக்கவில்லை. வாக்குறுதிகளை வழங்கவும் இல்லை.

இந் நிலையில் கட்சி வாக்கெடுப்பிலும் அரசாங்கத்திற்குச் சார்பாக வாக்களிப்பதற்கு எம்மிடம் எந்த நியாயங்களும் இல்லை. அனைத்துச் சிறுபான்மையின மக்களுக்கும் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இரண்டாவது சிறுபான்மையினமான முஸ்லிம்களின் பிரச்சினைகள் சற்று வித்தியாசமானவையாகும்.

எனவே எமது மக்களின் பிரச்சினைகள் எமது கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் எம்மை அழைத்து மிகவும் காத்திரமாக பேச வேண்டும். அது மட்டுமன்றி யதார்த்தமான நம்பக் கூடிய வாக்குறுதியும் வழங்க வேண்டும் என்றார். (ச)

## விடுதலைப்...

ரக இலகு விமானங்கள் செக் தயாரிப்பாகும். விடுதலைப்புலிகள் கனடாவில் உள்ள விமானிகள் கழகத்தின் ஊடாக அவற்றைக் கொள்வனவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகன்ன உள்ளிட்ட பிரதிநிதிகள் கடந்த நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் செக் குடியரசுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

எந்தவொரு நிலையிலும் யுத்த உதவிகளையும் வழங்க செக் குடியரசு தயாராகவிருப்பதாக அவர்களிடம் அந் நாடு தெரிவித்திருந்தது. இதனிடையே தேவையாயின் விமான அழிப்பு ஏவுகணைகளை இயக்க செக் படையினரையும் அனுப்ப முடியும் என்றும் செக் குடியரசு இலங்கைப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளது என்று அந்த ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வீடியோக்...

முன்பாகவுள்ள தனது வீடி யோக் கடைக்குச் சென்றபோதே வீதியில் வைத்து அவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக நேரில் சென்று விசாரணைகளை நடத்திய மல்லாகம் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-1)

## வெளிவிவகார...

இந்த ஆண்டு இறுதியில் முடிபடைவதால் ஜனவரி மாதத்தில் இப் புதிய நியமனங்கள் நடைமுறைக்கு வரக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

இலங்கையின் இந்தியாவுக்கான தூதுவர் றொமேஸ் ஜெயசிங்க போன்றவர்களின் பணிமூப்பு அடிப்படையில் வெளிவிவகார அமைச்சுக்கான செயலாளர் பட்டியலில் உள்ளார். ஆனால் றொமேஸ் ஜெயசிங்கவை நியமிப்பதில் மகிந்தவுக்கு விருப்பமில்லை என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## இலங்கை குறித்த நிலைப்....

பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள உறவுகளின் நெருக்கடிகளை அவர் பகிரங்கமாகத் தெரிவிக்கக்கூடும். மேலும் இலங்கை அரசாங்கம் மற்றும் உள்நாட்டு அரசியல் விவகாரங்கள் தொடர்பிலும் துணை இராணுவக் குழுவைச் சேர்ந்த கருணா என்ற நபரைப் பிரித்தானியாவுக்கு நாடு கடத்தியது தொடர்பிலும் அவர் அதிகாரபூர்வ மான கருத்துக்களை வெளியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச விதிகளை இலங்கை அரசாங்கம் மதித்து நடக்க வேண்டும் என்றும் சில்கொட் அழுத்தம் கொடுக்கக் கூடும். எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கான தூதுவர் பணியிலிருந்து சில்கொட் ஓய்வு பெற்று வாஷிங்டனின் உதவித் தலைமைஅதிகாரியாகப் பதவி ஏற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## மட்டக்களப்பு...

தெரிவித்திருக்கின்றனர்.

அச்சத்துடனேயே சேவையாற்ற தான் இங்கு வந்ததாக கூறும் வாகரை வைத்திய சாலையில் சேவையாற்றும் டாக்டர் சிந்தக ஹிமால் புஞ்சிஹேவா தொடர்ந்தும் அச்சத்துடனேயே இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். வாகரை வைத்தியசாலையில் போதிய வசதிகள் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

குறிப்பிட்ட வைத்திய நியமனங்கள் இம் மாவட்டத்திலுள்ள வைத்தியர்கள் பற்றாக் குறைக்கு தீர்வாக அமையாது என சுட்டிக் காட்டும் பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகம் அண்மையில் மீள் குடியேற்றம் இடம்பெற்ற பிரதேசங்களில் இவ் வைத்தியர்கள் தங்கியிருந்து சேவையாற்ற தயங்குவதாகவும் குறிப்பிடுகின்றார். (ச-5)

## ஏழு...

மேற்படி மாநாட்டில் பங்குபற்றும் சமயத் தலைவர்கள் இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் வன்முறைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் சமாதான வழிமுறைகள் மூலம் எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்தும் இதற்கு சர்வதேச ரீதியில் சமயங்களின் நல்லெண்ணத்தையும் உதவிகளையும் எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது பற்றியும் கலந்துரையாடவுள்ளனர்.

இம் மாநாட்டில் கம்போடியாவைச் சேர்ந்த புனிதமிகு டெப்வொங், மகாத்மா காந்தியின் பேர்த்தியான செல்வி எலா காந்தி (இவர் தென்னாபிரிக்க நாடாளுமன்றத்தின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்), பாகிஸ்தானைச் சேர்ந்த மிர் நவாஸ்கான் மார்வட், யப்பானைச் சேர்ந்த வண.கலாநிதி மிக்சியோ டி.ஷினோஷக்சி, நியூயோர்க்கைச் சேர்ந்த கலாநிதி வில்லியம் எப்.வெண்ட் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் உள்ளூர் இணைப்பாளர்களாகத் தேசிய சமாதான சபை மற்றும் சமாதானத்திற்கான சமயம் என்பன செயற்படவுள்ளன. இந்த மாநாட்டில் பங்குபற்றுபவர்கள் ஊடகவியலாளர்கள் மாநாடு ஒன்றையும் எதிர்வரும் 14 ஆம் திகதி நடத்தவுள்ளனர்.

மாநாட்டில் கலந்து கொள்ளும் சமயத் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அரசியல் மற்றும் சமூக அமைப்புக்களின் தலைவர்களையும் சந்திப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## நந்தன குணதிலக தலைமையில்...

அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிக்க மகிந்தவின் சகோதரர் பசில் ராஜபக்ஷ சம்மதிக்க வைத்துள்ளார்.இது தொடர்பில் பல சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

மகிந்தவுக்கு எதிராக ஜே.வி.பி. எதிர்த்து வாக்களிக்கும் நிலையில் டிசம்பர் 15 ஆம் திகதி ஜே.வி.பி. அதிருப்தியாளர்கள் ஒன்றிணைந்து நந்தன குணதிலக தலைமையில் புதிய குழுவை அல்லது கட்சியைத் தொடங்கவுள்ளனர். இதற்கு பசில் ராஜபக்ஷ முழு ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜே.வி.பியின் பல மாகாண உறுப்பினர்களுடன் இது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. ஜே.வி.பியை உடைப்பதன் மூலம் இலங்கையில் வலுவாகவுள்ள ஜே.வி.பியின் தொழிற்சங்கத்தையும் உடைத்து விடலாம் என்று மகிந்த திட்டமிட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (ச-5)

I.D.D அழைப்புகளுக்கு!!!

எந்த ஒரு தொலைபேசியில் இருந்தும் உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணமேவெளிநாட்டு அழைப்புகளை பெற்றுக் கொள்ள

29 A 2nd Chappel Lane, Colombo - 06

077 3993650

3/=

(ச-369)



Sale! மாபெரும் மலிவு விற்பனை! Sale!

கிறிஸ்மஸ், புதுவருட கொண்டாட்டத்தை முன்னிட்டு மலிவு விற்பனை!

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க டிசம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை விசேட கழிவு விற்பனை!

இன்றே விரையுங்கள்...

குறிப்பு : நத்தார், புதுவருட தினங்களை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் எமது நிலையம் திறந்திருக்கும்.

லைடன் புடவை நிலையம்

இல.410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 222 2381

(C-594)



**அன்பான வேண்டுகோள்**

நிஷானந்தா ஜுவல்லறி, 75 (121) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எமது அன்பான வாடிக்கையாளர்களே! நண்பர்களே! அன்பர்களே!

எமது நிறுவனம் எதிர்பாராத விதத்தில் துரதிர்ஷ்ட விதமாக கடந்த 01.12.2007 சனிக்கிழமை இரவு தீயினால் எரிந்து கருகி சாம்பலாகி விட்டது. நாம் மிகவும் வேதனையில் உள்ளோம். ஆகவே எமது வாடிக்கையாளர்களாகிய உங்களை எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்வதுடன் மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் அதே இடத்தில் எமது நிறுவனம் இயங்கும் எனவும் உங்கள் கொடுக்கல், வாங்கல்களை நாங்கள் தொடர்ந்து செய்வோம் எனவும் உறுதியளிக்கிறோம். தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

"நாம் உதிரவில்லை உடைந்து போயுள்ளோம்"
"உங்கள் ஆதரவே எங்கள் பலம்"

தீயை அணைக்கும் முயற்சியில் தீயுடன் போராடிய எனது ஊழியர்களுக்கும், அவர்களுடன் இணைந்து போராடிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் என் இதயம் உருகிய நன்றிகள்!!

அன்புடன்,
A.ஆனந்தன் (உரிமையாளர்)
மற்றும் நிர்வாகமும் ஊழியர்களும்.

அவசர அழைப்புக்கு:-021 222 7985

(666)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.